(Registered as a Newspaperin Ceylon)
P. M. G. NO. H. A. 59/300 of 1939.

உ
சிவமயம்.

விரோதி ௵ (1889) ஆவணி ௴ ௨௮ ௳ ஆரம்பமானது

# இந்துசாதனம்

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

**பத்திரக்கிரயம்**

வருஷம் ஒன்றுக்கு யாழ்ப்பாணப்பட்டினசங்கனலேக்குள்

| | |
|---|---|
| தமிழ் ரூபா 5.00 | இங்கிலீசும் தமிழும் 9.00 |
| இலங்கை இந்தியா 8.00 | இங்கிலீசும் தமிழும் 12.00 |
| தொடுவாய்ப்பகுதி 9.00 | இங்கிலீசும் தமிழும் 13.00 |

தனிப்பிரதி சதம் 5
முற்பணமனுப்பினாலன்றிக் கவனிக்கப்படமாட்டா.

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசனெந்தை யிணையடி நீழலே.

—அப்பர் சுவாமிகள்

**விளம்பர விகிதம்**

முதன்முறைக்கு

| | |
|---|---|
| ஒருகலம் ரூபா 10-00 | அரைக்கலம் ரூபா 5-50 |
| கால்கலம் ரூபா 4-00 | ஒருஅங்குலம் ரூ. 1.00 |

அடுத்தமுறைகட்கு மேற்படி விகிதங்களிற்பாதி
காலம் நீடித்த விளம்பரங்கள் விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் நேரிற் கண்டேனும் எழுத்து மூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

புத்தகம்—௫௧ | யாழ்ப்பாணம்:— பிரமாதி ௵ ஆனி ௴ ௮௳ (1939 ஜூன் 22 வியாழக்கிழமை) | இலக்கம் ௨௧

# வேதாந்தக் கொடி பிடித்த வீரர் இராமதீர்த்தர்

## சமரஸம் போதித்த சந்நியாசியின் வரலாற்றுக் குறிப்பு

சென்ற நூற்றாண்டின் இறுதியிலே இந்திய நாட்டின் மறுமலர்ச்சிக்கு அஸ்திவாரம் நாட்டிய பெரியாருள் சிறப்பாகக் குறிக்கத் தக்கவர் இருவர். ஒருவர் சுவாமி விவேகானந்தர்; இன்னொருவர் சுவாமி ராமதீர்த்தர். இவ்விருவரும் வேதாந்தக் கொடி தூக்கி வெளிநாடுகளில் எங்கும் இந்தியாவின் கலைமுரசு அடித்த மகான்களாவர்.

இச்சுவாமி ராமதீர்த்தர் 1873-ம் வருஷம் தீபாவளிக்கு மறுநாள் பஞ்சாபிலே கூர்ஜன்வாலா ஜில்லாவிலே முராலிவாலா என்ற கிராமத்திலே அவதரித்தார். இராமதீர்த்தரின் தந்தையரான கோஸ்வாமி ஹிராநந்தர் வடமேற்கு எல்லைப்புறத்திலுள்ள சில ஹிந்து குடும்பங்களுக்குக் குருவாயிருந்தார். ஏழைக் குடும்பம்; ஏதோ கஷ்ட ஜீவனம்.

ராமதீர்த்தர் பிறந்த சில நாட்களில் அவர் தம் தாய் துயர்மிக்க இவ்வுலக வாழ்வை நீத்தார். ஆகவே, ராமதீர்த்தரை அவர்தம் தமையனார் கோசேன்குருதாசரும், அவர்தம் அத்தையாருமே பாதுகாத்து வளர்த்தனர். வறுமையிலேயே குழந்தை ராமதீர்த்தர் வளர்ந்தார். எத்தனை எத்தனை கஷ்டங்கள்! எத்தனை எத்தனை துக்கங்கள்! ஆனால் மலை புரண்டாலும் மனங் கலங்காமன்னர் சுவாமி ராமதீர்த்தர். அறிவு பெருக்கவேண்டுமென்று ஆர்வம் அவருக்கு ரொம்ப இருந்தது. சிறு பிராயத்திலேயே அவரிடம் தெய்வீகக் கலையிருந்தது. குர்ஜன்வாலாவில் 1886-ம் வருஷம் ராமதீர்த்தர் மெட்ரிகுலேஷன் பரிக்ஷை தேறினார்.

### படிப்பு

பின்னே கலாசாலைப் படிப்புக்காக ராமதீர்த்தர் லாகூர் சென்றார். தளரா முயற்சியுடன் இடைவிடாது உழைத்தார். அவர் பட்ட கஷ்டங்களை நினைத்தால் கண்ணீர் வரும். தேளும் பாம்பும் வாசம் செய்யும் பாழ் மனைகளில் அவர் வசித்தார். கட்டத் துணியிராது. க்ஷத்திர மண்டலம்போல் ஒரு லக்ஷம் கந்தல் உள்ள வஸ்திரங்களை அவர் உடுத்துவார். வயிறு நிரம்பச் சோறுண்டா? படிப்பதற்குப் புத்தகம் உண்டா? இரவல் வாங்கிப் படிப்பார். பட்டினி கிடந்த நாட்கள் எத்தனை! விளக்குக்கு எண்ணெய் இல்லாமல் இருளில் காலந்தள்ளிய நாட்கள் எத்தனை? ஆனால் இவற்றையெல்லாம் பொறுமையுடன் சகித்துக்கொண்டு ராமதீர்த்தர் இண்டர்மீடியட் பாஸ் செய்தார். பி. ஏ. தேறும் வரை வறுமையும் அவரை விடவில்லை. எம். ஏ. படிக்குங்கால அவருக்கு ஸ்காலர்ஷிப் கிடைத்தது.

சிறுபிராயத்திலேயே இராமதீர்த்தருக்குக் கலியாணமாகிவிட்டது. ஆகவே, தமது இளம் மனைவியைப் பாதுகாத்து ரக்ஷிக்கும் பாரமும் அவர் தோளில் சுமந்தது.

இக்காலையிலே சுவாமி விவேகானந்தர் லாகூருக்கு விஜயம் செய்தார். தூங்கிக் கிடந்த பாஞ்சாலத்தைத் தட்டி எழுப்பினர். லாகூரில் வேதாந்தம் பற்றி அவர் செய்த சொற்பொழிவு இளைஞர் பலரைத் தட்டி எழுப்பியது. அக்காலை சிறிது சிறிதாகப் பரிபக்குவமடைந்து வந்த ராமதீர்த்தர் சந்நியாசியாக இமாலயம் சென்று காலம் கழிப்பதென்று தீர்மானித்தார்.

### சந்நியாசம்

தமது 26 வது வயதில் ராமதீர்த்தர் சந்நியாசத்தை மேற்கொண்டார்; ரிஷிகேசத்தருகே பலநாட்கள் இருந்தபின், அவர் சுவாநுபூதி பெற்றார். உலகமே தம்முள் இருப்பதாக அவர் உணர்ந்தார்.

சுவாமி ராமதீர்த்தர் உணர்ச்சிமிக்கவர்; உத்வேகமுள்ளவர்; இரக்கமும் அன்பும் வாய்ந்தவர். அவருக்குக் கடவுள் பித்துப் பிடித்தது. கடவுளை நினைத்துக் கண்ணீர் வடித்தார். அவர் எப்பொழுதும் மகிழ்ச்சியுடன் இருப்பார். அவர் தம் சிரிப்பிலே ஒரு கவர்ச்சியிருக்கும். சந்தோஷமாயிருக்கும் பொழுதே அவர் திடீரென்று மௌனமாய்விடுவார். 'ஓம்' என்று ஜெபிப்பார். அவர் அமைதிப் புயல்; சந்தோஷச் சூறாவளி. அவர் தொண்டருக்குத் தொண்டர்; அடியார்க்கும் அடியர்; எளியார்க்கு எளியர். உயர்வு தாழ்வு என்பது அவருக்கில்லை. உயிருள்ளது உயிரற்றது என்ற பேதமில்லை. புஸ்தகம் பேனா சில முதலியவைகளையும் தொழுவார். அவைகளுடன் பேசுவார். அவருக்கு உடல் பற்றிய கவலையே கிடையாது.

சுவாமி ராமதீர்த்தர் தம்மையே பிரபஞ்சமாகக் கருதினார். கற்பனையூர் அவர் உள்ளத்தில் ஞானத்தால் விளங்கியது. புத்த பகவானும் கிறிஸ்து பெருமானும் அவர் இதயத்தில் விளங்கினர்.

'தத்வமஸி' என்பதே அவரது வாக்ய சுலோகம். அதுவே நீ! பார்க்கும் பொருள் யாவும் நீயே. மன்னரும், தேவரும் அரக்கரும் வேறு எவரும் உலகில் உன்னைத் தகைய முடியாது, பயப்படாதே! மயங்காதே! என் தலையே உன் தலை! இஷ்டப்பட்டால் நீ என் தலையைச் சீவி விடலாம். ஆனால் அவ்விடத்திலே நூறு தலைகள் ஆயிரந் தலைகள் தோன்றும்' என்று அவர் கூறுவார்.

### திருக்குற்றாலம்
பண் குறிஞ்சி

செல்வமல்கு செண்பகம்
வேங்கை சென்றேறிக்
கொல்லை முல்லை மெல்லரும்
பீனுங்குற்றாலம்
வில்லினொல்கமும்
மதிலெய்து வினைபோக
கல்லினம்பானன்னகர்
போலுங்காமர்கோள்.

திரு ஞானசம்பந்தசுவாமிகள்

### போதனை

பின்னுமோரிடத்தில் அவர் கூறுகிறார்:—

"கிறிஸ்தவர்களே! ஹிந்துக்களே! பார்ஸிகளே! ஆரிய சமாஜிகளே! சீக்கியர்களே! முகமதியர்களே! எனது இஷ்ட தேவனின் பாதபூமியின் தானியத்தையும் உப்பையும் தின்று வளர்ந்தவர்களே! நீங்கள் எனது சகோதரர்கள் இல்லை. நானே நீங்கள்! நீங்களே நான்! நான் உங்கள் உடைமையென்று சொல்லுங்கள். நான் எல்லாரையும் ஆலிங்கனம் செய்துகொள்கிறேன். ஒருவரையும் விலக்கவில்லை. நானே அன்பு. நான் அன்பு வெள்ளம். எல்லாரையும் சமத்துவமாக அன்புடன் நான் நேசிக்கிறேன்."

ராமதீர்த்தர் சுதந்திர புருஷர். தைரியசாலி. அஞ்சா நெஞ்சம் படைத்தவர். சாஸ்திரங்களைச் சரியானபடி எடுத்துச் சொல்லுமாறு அவர் பண்டிதர்களுக்குக் கூறினார். தேசிய எண்ணத்துடன் ஜாதி வித்தியாசங்களை ஒழிக்கச் சொன்னார். அஞ்சாமையும் தன் முயற்சியும் உழைப்பும் வேண்டுமென்று அவர் போதித்தார். 'அஞ்சாதே! அஞ்சாதே! உனக்கு எதுவும் கெடுதல் பண்ணாது' என்று இயம்பினார். துறவு என்பது உலகை விட்டுக் காடு மலைகளுக்கு ஓடுவதாகாது. சுயநலப் பற்று நீக்கித் தியாகம் செய்வதே துறவு என்று அவர் கூறினார்.

ராமதீர்த்தர் கவிஞர். மலைவிழ் அருவிகள் பாட்டே அவருக்கு இன்பம்.

மரங்களிலே பறவைகள் கூடிப் பேசுவது கண்டு அவர் மகிழ்வார். கடல் அலையிலும் சூரியன் வீசு காற்றிலும் அவர் கண்ணனின் திருநடனம் கண்டார். இயற்கையுடன் ஒன்றி வாழ அவர் விரும்பினர்.

### பெயரற்ற மதம்

1902ம் வருஷம் சுவாமி ராமதீர்த்தர் ஜப்பான் சென்று மதப்பிரசாரம் செய்தார். அங்கிருந்து அமெரிக்கா சென்றார். விவேகானந்தர் விஜயத்துக்குப் பிறகு மற்றொரு சந்நியாசியை எதிர்நோக்கி நின்றது அமெரிக்கா. அங்கே ராமதீர்த்தர் வேதாந்த விஸ்தரணம் செய்தார்.

ராமதீர்த்தரின் சுதந்திரமான எண்ணத்தைக் கண்டு அமெரிக்கர் அயர்ந்தனர். 'நீங்களே! நில்லுங்கள்! கடவுளை அறிவீர்கள்' என்றார். சட்டதிட்டங்களும் வாதப்

தொடர்ச்சி 2ம் பக்கம்

# பற்று

பற்று, பாசம், பந்தம், அவா ஆசை என்பன ஒரு பொருட் சொற்கள். பற்று, அகப்பற்று புறப்பற்று என இருவகைப்படும். இவை முறையே நான் எனது எனவும், அகங்காரம் மமகாரம் எனவுஞ் சொல்லப்படும். தன்னிடத்தில் வைத்த ஆசை அகப்பற்று, தன்னைச் சார்ந்த பொருள்களாகிய மனைவி மக்கள் முதலியவர்களிடத்தும், மாதரிடத்தும், பொன்பூமி முதலியவற்றினிடத்தும் வைத்த ஆசை புறப்பற்றுமாம்.

ஆன்மா என்று உண்டோ அன்றே அதனிடத்தில் பாசமாகிய பற்றும் உண்டு. ஆன்மா என்றும் தனித்திராது. அது பாசத்தோடாவது கூடியிருக்கும்; சிவத்தோடாவது கூடியிருக்கும். அது அசத்தாகிய பாசத்தோடு கூடியிருக்கும்போது அசத்தாகவும், சத்தியாகிய சிவத்தோடு கூடியிருக்கும்போது சத்தாகவும் இருக்கும். அதனால் அது சதசத்து என்று சொல்லப்படும். அது அசத்தாகிய பாசத்தோடு கூடியபோது பசு என்னப்படும். பாசமாகிய ஆணவ மலத்தால் விழுங்கப்பட்டிருத்தலால் அணு என்றுஞ் சொல்லப்படும். அது ஆணவ மலத்தோடு கூடியபோது ஆன்மா வேறு ஆணவமலம் வேறு என்னுதபடி ஆணவமலமேயாயிருக்கும்; ஆணவமலத்தினின்றும் நீங்கிச் சிவத்தோடு கூடியபோது சிவம் வேறு தான் வேறு என்னுதபடி சிவமேயாயிருக்கும். இவ்வாறு சிவமும் ஆன்மாவும் பாசமும் ஒற்றுமைப்பட்டு நின்றநிலை அத்துவித நிலையென்று சொல்லப்படும். ஆன்மா பாசத்தோடு அத்துவிதமாக (இரண்டறக் கலந்து) நிற்கும்நிலை பெத்த நிலையெனவும், சிவத்தோடு இரண்டறக் கலந்திருக்கும் நிலை முத்தி நிலையெனவுஞ் சொல்லப்படும்.

ஆணவத்தோ டத்துவித
மானபடி மெய்ஞ்ஞானத்
தாணுவினோ டத்துவிதஞ்
சாருநா ளெந்நாளோ.

—தாயுமானசுவாமிகள்

ஆன்மா பெத்தநிலையிலே அஞ்ஞானத்தினாலே பொருளல்லாதனவாகிய தேகாதிப் பிரபஞ்சங்களைப் பொருளென மதித்து அவற்றினிடத்தில் மேலும் மேலும் பற்று வைத்தலினால் ஓயாமல் பிறந்து பிறந்துழல்கின்றன.

பொருளல்ல வற்றைப்
பொருளென் றுணரும்
மருளானா மாணாப் பிறப்பு

—திருக்குறள்

ஆதலால் மோட்சாபேட்சையுடையவர்கள் தேகாதிப் பிரபஞ்சங்களிடத்தில் பற்று ஒழித்திருத்தல்வேண்டும். மோட்சம், முத்தி, வீடு என்பன ஒரு பொருட் சொற்கள். இவை யாவும் (பற்று) விட்டிருத்தல் என்னும் பொருளையே தருதலால பற்று விட்டிருத்தலே முத்தி யென்னப்படும். (வீடு என்பது விடுதல் என்னும் சொல்லின் திரிபாகிய முதனிலை திரிந்த தொழிற் பெயர்.)

மனிதர்கள் பற்றையொழிப்பதற்குப் பற்பல உபாயங்களை யநுசரிப்பர். சிலர் துறவறத்தால் பற்றையொழிக்க முயலுவர். சிலர் தவம் யோகம் முதலியவற்றால் அதையொழிக்கப் பார்ப்பர். சிலர் ஞான நூலாராய்ச்சியால் அதனை நீக்க வழி தேடுவர்.

இவ்வுபாயங்களால் பற்றையொழிப்பது கடினமாகும். பற்றையொழிப்பதற்குப் பக்தி மார்க்கமே எல்லாவற்றுள்ளும் எளியதும் மேலானதுமான மார்க்கம்.

என்பே விறகா இறைச்சி
யறுத்திட்டுப்
பொன்போற் கனலிற்
பொரிய வறுப்பினும்
அன்போ டுருகி
யகங்குழை வார்க்கன்றி
யென்போன் மணியினை
யெய்தவொண் ணாதே.

—திருமந்திரம்

ஒரு பச்சிலையைப் பற்றிநின்றதோர் புழு அப்பச்சிலையை விட்டு நீங்குவதற்கு வேறொரு பச்சிலையைப் பற்றுவதுபோல, எப்போதும் ஒன்றைப் பற்றி வர்த்தித்தலையே இயற்கையாகவுடைய ஆன்மாக்கள் தாங்கள் பற்றிநின்ற பிரபஞ்சப்பற்றைவிட்டு நீங்குவதற்குப் பற்றற்ற கடவுளைப் பெரும் பற்றாகப் பற்றவேண்டும். கடவுளிடத்தில் பற்று உயர உயரப் பிரபஞ்சப்பற்று தானே நீங்கிவிடும்.

பற்றுக பற்றற்றான்
பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

—திருக்குறள்

அன்றியும், "பெற்ற சிறுகப் பெறாத பெரிதன்னுஞ் சிற்றுயிர்" எனக் குமரகுருபர சுவாமிகள் அருளிச்செய்தவாறு, தாம்பெற்ற பொருள்களைச் சிறியனவாகவும் பெறாத பொருள்களைப் பெரியனவாகவும் எண்ணுதல் உயிர்களின் இயற்கை. உலகத்திலுள்ள பொருள்களெல்லாம் ஒன்றினொன்று உயர்ந்தனவும் தாழ்ந்தனவுமாக இருக்கும். ஆதலால், முன்னே ஒரு பொருளின்கண் பற்று வைத்து அதை வருந்தித்தேடி யடைந்த பிறகு அதனினும் பெரிதாகிய வேறொரு பொருளை நோக்க இதற்கு முன் வருந்தித்தேடி அரிதிற் கிடைத்த பொருள் சிறிதாகத் தோன்றும். அது சிறிதாகத் தோன்றுதலும், அதனினும் பெரிதாகிய வேறொரு பொருளிடத்தில் ஆசையுண்டாகிறது.

ஆசைக்கொ ரளவில்லை யகிலமெல்
லாங்கட்டி யாளினுங் கடல்மீதிலே
யாணைசெல வேநினைவ ரளகேசனிக
ராகவம் பொன்மிகவைத்த பேரு
நேசித்து ரசவாத வித்தைக் கலைந்
திடுவர் நெடுநா ளிருந்த பேரு
நிலையாக வேயினுங் காயகற் பந்தேடி
நெஞ்சுபுண் ணாவரெல்லாம்
யோசிக்கும் வேளையிற் பசிதீர வுண்
பது முறங்குவது மாகமுடியு
முள்ளதே போதுநா னானெனக் குழ
றியே யொன்றைவிட் டொன்று
பற்றிப்
பாசக்கடற் குளேவீழாமல் மனதற்ற
பரிசுத்த நிலையையருள் வாய்
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற
நிறைகின்ற பரிபூர ணானந்தமே

—தாயுமான சுவாமிகள்

தொடர்ச்சி 2ம் பக்கம்

## திருக்கோணமலைப் பகுதிப் பாடசாலைச் சங்கீத விழா

சென்ற சனிக்கிழமை (17-6-39) மாலை 6 மணியளவில், திருக்கோணமலைப் பாடசாலைகளிலுள்ள மாணவ மாணவிகளால் ஒரு சங்கீத விழா, (உயர்தரக் கல்லூரிப் பரீக்ஷாதிபர்) ஸ்ரீமான் V. K. நாதன் அவர்களின் தலைமையில்நடாத்தப்பட்டது. சிறுவர்முதல் முதியோர்வரை அங்கு சமுகமளித்திருந்தனர். கோலாட்டம், வங்காளிபாபு, பாரதிபாடல், தேசியகீதம், மார்க்கண்டேயர் சரித்திரம், கீர்த்தனம் என்னும் பல நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. இவற்றுள் வங்காளி பாபு என்னும் நிகழ்ச்சி சபையை மகிழ்வித்தது. சில மாணவிகளால் 'விடுதலை' என்னும் பாரதிபாடல் அப்பெரியார் வகுத்த இராகதாள முறைப்படி பாடப்பட்டது. இப்பாடல் 'ஒற்றுமை' என்னும் பொக்கிஷத்தை உணர்த்துவதாயிற்று. இம் மாணவிகள் வெவ்வேறு கலாசாலைகளைச் சார்ந்தவர்களாயினும் இப்பாடலுக்கேற்ப ஒன்றுகூடிப்பாடியதே என்றும் போற்றத்தக்கதாகும்.

'வாழிகல்வி செல்வமெய்தி மனமகிழ்ந்து கூடியே
மனிதர் யாரு மொருநிகர் சமானமாக வாழ்வோமே'

என்னும் அடிகளைப் பாடும்போது 'ஒற்றுமை' என்னும் நறுமணம் மண்டபமெங்கும் வீசலாயிற்று.

இந்து ஆங்கில கல்லூரி மாணவர்களால் 'வந்தேமாதரம்' என்னும் தேசியகீதம் பாடப்பட்டது. இம்மாணவர்களும் அம்மாணவிகள்போல், கீதத்தின் இறுதியில் ஒற்றுமை என்பதை உள்ளங்கைநெல்லிக்கனி போல் விளக்கிக் காட்டினர்.

'ஒன்றாய் நின்று நீவீர் வென்றுயிரு முயிர் சென்றுயினும் வலி குன்று தோதலம்'

என்னும் இற்றடிகளைப் பாடியபின்னர், எண்மரில் ஐவரைப் பிரித்துப் பிக்விட்டு எஞ்சிய மூவரும் வேறு பாடல் பாடினர்.

மிஸ். K. நடராஜாவால் பிடில் வாசித்து நீலாம்புரிக் கீர்த்தனமொன்று பாடப்பட்டது. மிஸ். நடராஜா 8 வயதுச் சிறுமியாயினும், சங்கீத ஸ்வரக் ஞானத்தில் பெரியவளென்பது, பிடில் வாசித்த சாதரியத்திலும், ஸ்வர சாகித்தியம் பாடிய சாவதானமையிலும், லது, தருகம், சிறைவருத ஸ்வரம் பாடிப் பல்லவியைக் குறித்த லதுவில் எடுத்துக்கொண்ட தன்மையினுலும் வெள்ளிடை மலைபோல் விளங்கிற்று.

மாஸ்டர் S. ராஜூதனின் பெயர் நிகழ்ச்சிப் பத்திரத்தில் குறிப்பிடும்படி கொடுக்கப்பட்டிருக்கபோதும், அவரது கச்சேரி அன்று நடைபெறவில்லை. இஃது அங்குள்ள சங்கீத விற்பன்னர்கட்கும் அவரது பாடலை எதிர்பார்த்திருந்த மற்றையோர்கட்கும், ஏமாற்றத்தை விளைத்தது.

சுடிதா.

## மாண்டவர் மீண்ட மாயம்!

—o—

### கடலுக்குப் பலியான செம்படவன்

### சுகமாக வீடு திரும்பினன்

நீர்கொழும்பு ஜூன் 18

குருநகர் குரியா நிக்கலஸ் பர்னண்டோ என்னும் செம்படவரும் வேறு மூவருமாக மீன் பிடிக்கச் சென்றதில் நடுக்கடலில் நிக்கலஸ் கடலுக்குள் விழுந்துவிட்டாரெனவும் அவருடைய பிரேதம் இன்னும் காணப்படவில்லையெனவும் சேற்றுக் கூறப்பட்டது.

நிக்கலஸ் இனி மீட்கப்படமாட்டாரென்ற எண்ணத்துடன் அவருடைய பெற்றோர் பிரேத அடக்கத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தபின், அவரது பிரேதத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். இறந்தவரின் பிரேதம் கரையில் ஒதுக்கப்படுமென்னும் நோக்கத்துடன் கடற்கரையில் அநேகர் கவனித்துப் பார்த்துக்கொண்டிருந்தனர். நீர்கொழும்பு கடற்கரையில் சில பெண்கள் நிக்கலஸின் மரணத்தைக் குறித்து அழுது புலம்பிக்கொண்டிருந்தனர்.

ஆனல், திடீரென நிக்கலஸ் பர்னண்டோ இன்று வீடுதிரும்பியதைக் கண்டு இவ்வூர் ஜனங்கள் ஆச்சரியமடைந்தனர். நூற்றுக்கணக்கான ஜனங்கள் அவரது வருகையைக் கண்டு எதிர்சென்று அவரை வரவேற்றனர்.

நிக்கலஸ் ஒரு பத்திரிகை நிருபரிடம் கூறியதாவது:-

நடுக்கடலிலிருக்கையில் மழை பெய்து புயல் காற்று அடித்ததால், படகு கடலில் ஆழ்த்தப்பட்டு விடுமோ என்ற பயம் ஏற்பட்டதும் நான் தோணிப் பாயை அவிழ்த்துவிட முயற்சித்தேன்! அப்பொழுது நான் கடலில் தவறி விழுந்துவிட்டேன். என்னுடன் வந்தவர்கள்மூவரும் என்னைக் காப்பாற்ற முயற்சித்தும் அவர்களால் முடியவில்லை.

பின்னர் நான் அலைகளிடையே அலைந்துபட்டுக்கொண்டிருக்கையில், தண்ணீரில் மிதந்துகொண்டிருந்த ஒரு பெரிய மரக்கட்டை எனக்கு அகப்பட்டது. நான் அதை நன்றாகப் பிடித்துக்கொண்டிருந்தேன், ஆனல் அது எங்கே செல்லுகிறதென்பது எனக்குத் தெரியவில்லை.

கடைசியாக நான் மிகுந்த களைப்புடன் சிலாபக் கரையிலுள்ள உலஹெட்டியாவை என்னும் கிராமக் கரைக்குப் போய்ச் சேர்ந்தேன். அங்கிருந்த பல செம்படவர்கள் எனக்குச் சூடான காப்பியைக் கொடுத்து என்னைத் தேற்றினர்கள். பின்னர் அவர்கள் என்னைப் பஸ் மார்க்கமாக வீட்டிற்கு அனுப்பி வைத்தனர்.

## ஸ்ரீதனம் செய்யும் சீர்கேடு

### மாமனுக்கு மச்சானின் கத்திக் குத்து

வேலூர் ஜூன் 16

வேலூர் கஸ்பாவிற் சில தினங்களுக்கு முன் இரவு ஏறக்குறைய 7-30 மணிக்குக் கஸ்பா கன்னம்புக் காரவீதி இராகவப்பிள்ளை மகன் ஏறக்குறைய 30 வயது ஆறுமுகப் பிள்ளையை அவரது மச்சானும் ஸ்ரீ கருப்ப மந்திரி குமாரனுமான ஏறக்குறைய 20 வயதுக் கிருஷ்ணபிள்ளை என்பவர் பேனுக் கத்தியால் முதுகில் இரண்டு இடங்களிலும் இடதுகைப் புசத்திலுமாக 3 குத்துகள் குத்திவிட்டதாகச் சொல்லப் படுகிறது.

மேற்படி ஸ்ரீ ஆறுமுகப்பிள்ளை மேற்படி கருப்ப மந்திரியின் மருமகப் பிள்ளை என்றும் எதிரி கிருஷ்ண பிள்ளை ஆறுமுகப் பிள்ளையினுடைய வீட்டிலிருந்த தவலை கிண்ணி செம்பு ஆகிய சில பாத்திரங்களைப் பகலில் எடுத்துச் சென்று விட்டாரென்றும் அன்று இரவு ஏறக்குறைய 7-15 மணிக்கு மாமனர் வீட்டிற்குச் சென்று கருப்ப மந்திரியிடம் நடந்த விஷயத்தைக் கூறியதாகவும் கருப்ப மந்திரி பிள்ளைக்குச் சிபார்சாகப்பேசு கையில் தான் சீர் கொடுத்த சாமான்களே யவையென்று அவர் சம்பாதித்த எந்தச் சாமான்களையும் எடுத்துச் சென்றுவிடவில்லையே என்று கூறியதாகவும் இதற்கு மருமகப் பிள்ளை அப்படிக் கொடுத்த சாமான்களைத் திருப்பி எடுத்துக் கொண்டு சென்றுவிட என் கலியாணத்தின் போது சீர் கொடுக்க வேண்டுமென்று கேட்கப் பேச்சு வளர்ந்த தென்றும் மாமனர் ஓடி வந்து ஸ்ரீ ஆறுமுகப் பிள்ளையைச் சேர்த்துக் கட்டிப் பிடித்துக் கொண்டதாகவும் அப்போது உள்ளேயிருந்த மேற்படி எதிரி கிருஷ்ண பிள்ளை தன் கையிலிருந்த பேனுக் கத்தியால் மேலே சொன்ன மாதிரிக் குத்திக் காயப்படுத்தினன் என்றும் சொல்லப்படுகிறது.

## யோகியின் அற்புதம்
### 9 மணிநேரம் பூமிக்குள் இருந்தார்

பம்பாயில் வடமதுரையைச் சேர்ந்த பகவான் சுவாமியென்ற பெரியார் ஒரு பெரிய அற்புதத்தைச் செய்தார். அவர் பம்பாய் நகரில் உள்ள பிராமண சகாய சங்க வளவுக்குள் தோண்டிய ஒரு குழியில் 9-6-39 வெள்ளிக்கிழமை காலை இறங்கினர். அவர் இறங்கியவுடன் குழியை மண்ணால் மூடினர்கள். ஓர் இரும்புத் தகட்டினல் குழியின் வாயிலை மூடினர்கள் உள்ளே காற்றுச் செல்லாமலிருப்பதற்காகச் சீமெந்து பூசினர்கள்.

நாலடி சதுரமுள்ள குழியில் சாமியார் மான்தோலில் யோகாசனத்தில் அமர்ந்தார். அவருக்கு மாலை அணியப்பட்டது. பூமிக்குள் இறங்குவதற்கு முன் சுவாமியார் சில வார்த்தைகள் பேசினர்.

ஒன்பது மணி நேரம் கழிந்தபின் குழியைத் தோண்டினர்கள். சுவாமியார் எவ்வித களைப்புமின்றி எழுந்து வந்தார். அவர் கழுத்தில் போட்டிருந்த மாலைகள் வாடாமல் மலர்ந்த மாலைகளாகவே விளங்கின. அவரை வைத்தியர்கள் சோதனை செய்ததில் அவர் உடல் நிலையில் எத்தகைய மாறுதலும் தெரியவில்லை.

ஸ்ரீ மலையன் ஓரேஜ்ட் கொப்பனி
(ஜெகப்புச் செல்கம் கொப்பனி)
இருப்புபிக்கவும் [illegible] சாமான்
கள் இருக்கின்றன
விற்பனை செய்வோர்
பெரியகடை, யாழ்ப்பாணம்.
"புதுப்புடவை"
K. A. [illegible]
Y 50. 3-4-39 to 3-6-40

## காதலின் நூதன முறை

### பெண்ணைப் பெறுதற்கு அவள் வாசலில் உண்ணாவிரதம்

### பழைய மடலேறும் முறையின் எதிரொலியா?

—.—

ஜான்ஸி ஜூன் 17—

தன் மனைவியை மீண்டும் அடைவதற்காகச் சாகும்வரையில் உண்ணாவிரதத்தை ஒரு மாணவர் மேற்கொண்டிருப்பதாக இங்குள்ளிருந்து வந்த செய்தி ஒன்று கூறுகிறது.

கல்லூரியிற் படித்துக்கொண்டிருந்த மாணவர் அதே கல்லூரியிற் படித்துக்கொண்டிருந்த பெண்மீது காதல் கொண்டார். காதல் கலியாணத்தில் முடிந்தது.

இருவரும் விவாகப்பதிவு விவாகச் சட்டத்தின்படி கலியாணஞ் செய்துகொண்டனர். கொஞ்சகாலத்துக்குப் பிறகு இருவருக்கும் சண்டை உண்டாயிற்று. அவள் அவரை விட்டுப் பிரிந்துவிட்டாள்.

திரும்ப வீட்டுக்கு வரவேண்டுமென்று அம்மாணவர் அவளைப் பலமுறை மன்றாடிக் கேட்டுக்கொண்டார். ஆனல் பயனில்லை. இப்பொழுது கடைசி ஆயுதமாகச் சாகும்வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருக்கிறார். மாமியார் வீட்டுவாசலின் எதிரில் மனைவியின் போட்டோ ஒன்றை வைத்துக்கொண்டு உண்ணாவிரதமிருந்து வருகிறார்.

## இரும்புச் சுவாசக் கருவியின் உதவி

—0—

### மற்றொரு குழந்தைக்கு அபயம்

யாழ்ப்பாணம் ஜூன் 16-

நேற்று அதிகாலை யாழ்ப்பாணம் சிவில் ஆஸ்பத்திரியில் இளவாலையைச் சேர்ந்த ஒரு வாலிபமாது இரட்டைக்குழந்தைகளைப் பெற்றாள். இரண்டாவது குழந்தை மூச்சுத் திணறியதாகக் காணப்பட்டதும் உடனே குழந்தை இரும்புச் சுவாசக்கருவியில் வைக்கப்பட்டது. ஏறக்குறைய அரைமணி நேரத்தின் பின்னர்க் குழந்தை சுகமாக மூச்சுவிட ஆரம்பித்தது.

ஆஸ்பத்திரியில் முன்பு ஒரு முறையும் ஒரு குழந்தை இவ்விதமாகக் காப்பாற்றப்பட்டுள்ளது.

## வைஸிராய் புதல்விக்குக் கல்யாணம்

### அடுத்த நவம்பரில் இந்தியாவில் நடக்கும்

சிம்லா ஜூன் 15—

வைஸிராயின் மூத்த புதல்வியான லேடி ஆன் அடெலின் ஹோப்புக்கும் லெப்டினண்டு பாட்ரிக் ஹென்றி ஜோன் சவுதபிக்கும் இவ்வருடம் நவம்பர் மாதம் இந்தியாவில் விவாகம் நடக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## ஜப்பானுக்குச் சோவியத்தின் ஆட்சேபம்

மொஸ்கோ ஜூன் 17—

டீன்ஸினிலுள்ள சோவியத் கொன்ஸல் காரியாலயத்தை வெள்ளை ருஷியர்கள் சமீபகாலத்திற் கைப்பற்றியதைப்பற்றிச் சோவியத் அரசாங்கம் ஜப்பானிடம் ஆட்சேபித்திருப்பதாக அறியப்படுகிறது.

சோவியத் உதவி அயல்நாட்டு மந்திரி திரு. லெஸோவ்ஸ்கி இங்குள்ள ஜப்பானிய ஸ்தானிகரிடம் ஆட்சேபனையைச் சமர்ப்பித்தார்.

தனக்கு இதுவிஷயமாகத் தகவலொன்றும் கிடைக்கவில்லை என்று ஸ்தானிகர் பதிலளித்து ஆட்சேபனையைப்பற்றி டோகியோவுக்கு அறிவிப்பதாக வாக்களித்தார்.

## மங்கையர் மானத்தை விற்று வயிறு வளர்க்கும் காதகர்கள்

### சமூகபிணியை வெட்டி வீழ்த்துக

### பேதைப் பெண்களின் அதோகதி?

கண்டி ஜூன் 18—

கண்டி கலிகோதசாமிபத்தின் 25-வது ஆண்டுப் பொதுக் கூட்டமானது இன்று மாலை தர்மராசக் கல்லூரியில் நடந்தது. திரு. பி. பிமதஹேபோல தலைமை வகித்தார். இங்கு பி. பி. ரணராசா என்பவர் பேசுகையில் கூறியதாவது:—

நகரத்திற்கு வந்தால் வேலை தருவேன் என்று பாமரக்கிராம யுவதிகளுக்கு ஆசைகாட்டி அவர்களை நகரத்திற்கு அழைத்துச்சென்று விபசாரத்தொழிலில் ஈடுபடச்செய்து பல கிராதகர்கள் பணம் சம்பாதிக்கின்றனர். இவ்வேட்கம் கெட்ட அக்கிரமமானது பெருகிவிட்டது. பேதைப்பெண்கள் இவ்வாறு பாழுங் குழிகளில் வீழ்த்தப்படுவது தடுக்கப்படவேண்டும்.

இதுபோன்ற விஷயங்கள் பகிரங்கமான விவாதத்திற்கு உரியனவல்ல. ஆனலும் கொடிதிலும் கொடிய இத்தீய வழக்கத்தை வேருடன் வெட்டி வீழ்த்திக் குழியை மூடப் பொதுசன உணர்ச்சி ஏற்படவேண்டியது அத்தியாவசியமாகிறது. பொதுசன உணர்ச்சியைக் கிளப்பப் பகிரங்கப் பிரசங்கத்தைத் தவிர வேறு ஓர் ஆயுதமுங் கிடையாது.

சென்றவாரம் கண்டிப் பொலிஸ் கோட்டில் மங்கையரின் மான விற்பனையைக் கொண்டு வயிறுவளர்த்த ஆறு காதகர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகள் நடந்திருக்கின்றன. இத் தப்பரிதாபமான நிலைமைக்கு என்ன காரணமென்பதை அறிந்துகொள்ளக் கிராமங்களுக்குச்சென்று இக்கொடிய மகாபாதகம் தலையெடுக்கவொட்டாதபடி சங்கம் வேலைசெய்யவேண்டியது அவசியம்.

## தோட்டத்திற் "புதையல்கள்"

### ஆலயத்தில் திருடப்பட்ட நகைகள்

### பொலிசார் திரும்பக் கைப்பற்றினர்

தியாலக்கொடை ஜூன் 18-

கந்தவிஹாரையிலிருந்து திருடப்பட்ட திரவியங்களில் ஒரு சிறிய பாகம் நேற்றுமாலை அனுத்காமம் பொலிசாரால் திரும்பக் கைப்பற்றப்பட்டது.

தங்கம் வெள்ளிச் சாமான்கள் ஒரு துணியிற் பொதியப்பட்டுக் கலுவரமோதரையில் வசிக்கும் ஒருவருடைய வீட்டுக் கொல்லைப் புறத்திற் புதைக்கப்பட்டு இருந்தன.

தகவல் கிடைத்ததன் பேரில் பொலிசார் ஸ்தலத்திற்குச் சென்று சோதனைசெய்தனர். வீட்டில் யாதொரு நகையும் அகப்படவில்லை. ஆனல் கொல்லைப் புறத்தில் ஒரு மணற்குவியலில் ஓர் பொட்டலம் புதைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. அதில் இரு தனிப் பார்சல்கள் காணப்பட்டன. ஒன்றில் 38ரூபாய் எடையுள்ள வெள்ளிச் சங்கிலிகளும் காணப்பட்டன. இது சம்பந்தமாக ஜூலிஸ் என்பவன் பொலிஸ் பந்தோபஸ்தில் வைக்கப்பட்டிருக்கிறான். தன் தோட்டத்தில் அந்தச் சாமான் பொட்டலம் எவ்விதம் புதைக்கப்பட்டதென்ற விபரம் தெரியாதென்பதாக அவன் கூறுகிறான். அவன் கலுத்துறைப் பொலிஸ்கோட்டில் ஆஜர் செய்யப்படுவான். சில நாட்களுக்குமுன் இதே விகாரையிலிருந்து திருட்டுப்போன நகைகள் மஸ்கெலையிலுள்ள பாண்சலைத்தை ஜேமிஸ் என்பவருடைய வீட்டிலிருந்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. ஜேமிஸ் கைது செய்யப்பட்டான்.

திருட்டுப்போன சொத்தின் பெரும்பகுதி இன்னும் அகப்படவில்லை. இவை 2 லக்ஷம் ரூபாய்க்கு மதிக்கப்படுகின்றன. அனுத்காமம் பொலிசார் தொடர்ந்து விசாரணை செய்து வருகின்றனர்.

## தவறு தப்பியது தம்பிரான் புண்ணியம்

### கோட்டில் நீதவானுக்கு இரும்புக் குழாயால் எறிந்தஎதிரி

நுவரெலியா ஜூன் 17

நுவரெலியாப் பொலிஸ் நீதிபதி திரு. ஆர். எஸ். ஜெரபேட்ஸ் இன்று மிக்க ஆச்சரியமான விதமாக உயிர் தப்பினர்.

கோட்டில் நீதிபதியின் தலைக்கு ஒருவன் குறிவைத்து ஓர் இரும்புக் குழாயை வீசினன். தன்மீது கடுங்காவற்றண்டனைத் தீர்ப்புக்கூறப்பட்ட மேடத்தில் ஒரு கைதியே இவ்வாறு செய்தான்.

திரு. ஜெரபேட் நல்லவேளையாகத் திடீரென்று குனிந்து கொண்டார். இரும்புக் குழாய் அவரது தலையை உரோஞ்சிக் கொண்டு சென்றது.

இந்தத் துணிகரமான செயலைச் செய்த எதிரி நியத்தலாவைவாசியான கே. ஏ. மார்ட்டின் என்பவனுவன். பம்பர கொல்லை என்ற இடத்தில் ஒரு பணப்பையைத் திருடியதாக அவன்மீது குற்றஞ் சாட்டப்பட்டது. விசாரணை இறுதியில் நீதிபதி எதிரிக்கு ஒரு வருஷக் கடுங்காவற் றண்டனை விதித்தார்.

இவ்வித கடுந்தண்டனையை வெறுக்குந் தன்மையில், அவன் தன்பக்கத்தே மற்றொரு வழக்குச்சம்பந்தமாகக் கோட்டுக்குக் கொண்டுவரப்பட்டிருந்த இரும்புக் குழாய் கிடந்ததைக் கண்டு திடீரென அதைத் தூக்கி நீதிபதியின் மீது வீசினன்.

குறித்த பேர்வழி கோட்டிலிருந்த சேவகர்கள் பொலிசார் ஆகியோரால் அடக்கப்பட்டான்.

பின், அவன் உதவிமாகாணத் தலைவர் திரு. ஜே. ஏ. முல்ஹாலிடம் கொண்டு போகப்பட்டான். அவர் இரண்டாவது குற்றத்தின்பேரில் அவனுக்கு மேலும் இரண்டு வருஷக் கடுங்காவற்றண்டனை விதித்தார்.

## பிக்குவுக்கு மரண தண்டனை

### மற்றொரு பிக்குவைக் கொலை செய்ததன் விளைவு

கண்டி ஜூன் 17

ஒரு பௌத்த குருவை மற்றொரு பௌத்தகுரு கொலை செய்த வழக்கு விசாரணை இன்று அஸைஸ் கோட்டில் முடிவுக்கு வந்தது. ஜூரிகள் எதிரிமீது கொலைக்குற்றவாளி என்று ஏகமனதாகத் தீர்ப்புக் கூறினர்.

நீதிபதி திரு. ஹெர்ன் எதிரி மீது மரணதண்டனை விதித்தார்.

ஜூரிகள் தமது தீர்ப்பில் எதிரியின் வயது அவரது முந்தின குணநிசயங்கள் ஆகியவை காரணமாக அவர்மீது கருணை காட்டலாமென்று சிபார்சு செய்தனர்.

மரணதண்டனை விதிக்கப்பட்டவர் குருணாக்கலைக்கு அருகிலுள்ள கலவிஹாரையைச் சேர்ந்த பன்னுலந்தா தேரோவாவர். அவர் சென்ற வருஷம் நவம்பர் மாதம் 15-ந் தேதி அதே கோவிலைச் சேர்ந்த சீலானந்தா தேரோவைக் கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தார்.

№ 402

### சந்தேகப் பேர்வழிகள் விடுதலை

களுத்துறை ஜூன் 19—

கந்தவிகாரைக் கோயிலில்கொள்ளைபோனது சம்பந்தமாகச் சந்தேகத்தின்பேரிற் கைது செய்யப்பட்ட லோரிசா கிரிஅப்புகாமி, செய்துவா, சாடியா ஆகியவர்கள் இன்று களுத்துறை நீதிபதியால் விடுதலை செய்யப்பட்டனர். குறித்த சந்தேகப் பேர்வழிகளுக்கு விரோதமாக எவ்வித சாட்சியமும் இல்லை.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல்வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம்: பிரமாதி ௵ ஆனி௴ அ௨ வியாழக்கிழமை

## ஜப்பான் நிற்கும் நிலை

சீனத்துடன் நீடித்தகாலமாக யுத்தஞ் செய்தமையினுல் ஜப்பானியர் பராக்கிரமங்குன்றி வருகின்றனரெனப் பிருத்தானியர் முதலாம் அயிரோப்பிய தத்துவ ராச்சியத்தினர் தங்களளவிலே மனரம்மியமடைந்திருக்க, அந்த ஜப்பானியர் சீனத்துடன் மாத்திரம் நில்லாது இப்பொழுது பிருத்தானியர்பிரான்ஸியர்அமரிக்கர் முதலாந் தத்துவ ராச்சியத்தினருடனும்வெளிப்படையாகப் பகைமை சாதிக்கத் தலைப்பட்டுநிற்கின்றனர்; பிருத்தானியரைப் பலாத்காரமாக யுத்தத்திற்கு இழுக்கின்றனர்; ஆனல், அவர்கள் எப்படிப் போருக்கு வரச் சொல்லி இழுத்தாலும் எங்கள் பிருத்தானியர் ஒரு போதும் யுத்தத்திற்குப்போகத் துணிவதில்லை; ஏன்? இவர்கள உலக சமாதானத்தையே விரும்பி நிற்கின்றவர்களாதலினுலென்க. ஜர்மனியரும் இத்தலியரும் யப்பானுடன் நட்புப்பூண்டிருக்கும் வரையில் அந்த யப்பானுக்கு வ ர க் கூ டி ய கேடொன்றுமில்லை யெனலாம்.

சீனத்திலே அயிரோப்பிய ராச்சியங்களின் அதிகாரத்திலுள்ள ஊர்களிலும் ஜப்பானியர் அவர்களுடைய அதிகாரத்தைக் கெடுத்துத் தங்கள் அதிகாரத்தையே செலுத்த முயலுகின்றார்கள்; தியன்ரிஸன் என்னும் ஊரில் யப்பானியர் பிருத்தானியருக்கும்பிரான்ஸியருக்குமுள்ள சுவாதீனத்தைத் தவிர்த்துவிடும் நோக்கமாக அவ்விரு சாதியாருக்கும் மாறுகப் பெருங் கட்டுப்பாடுகளைச் செய்கின்றனர். யப்பானியர் பக்கலிலுள்ள ஒருசீனனை அவர்களுக்கு விரோதமான நாலு சீனர் கொலைசெய்துவிட்டுப் பிருத்தானிய சுவாதீனத்துள்ள நாட்டில் அந்நால்வரும் அடைக்கலம் புகுந்து விட்டனர்; அக்குற்றவாளிகளைத் தங்களிடம் ஒப்புவிக்கும்படி பிருத்தானியரை ஜப்பான் அதிகாரிகள் கேட்டனர்; அக்குற்றவாளிகளை விசாரணை செய்து அவர்கள் குற்றவாளிகளெனக் கண்டாற்றுன் யப்பான் அதிகாரிகள் வசம் அவர்களை ஒப்புவிக்கலாமெனப் பிருத்தானியர் தெரிவித்தனர்; பிருத்தானியருடைய கேள்வி நியாயமானது; ஆனல் யப்பானியர் அதற்கு உடன்படாது வல்வழக்குப் பேசுகின்றார்கள்; இவைமாத்திரமல்லாமல் சீனக் கடலிற் செல்லும் கப்பல்கள் ஒவ்வொன்றையும் யப்பானியர் தடுத்துச் சோதனை செய்த பின்பே அப்பாற் போகவிடுகிறார்கள்; இப்படியான அதிகாரச் செயல்களெல்லாம் பிருத்தானியருக்கு அதிக ஆத்திரத்தை ஆக்கிவிட்டன; பிருத்தானியர் யப்பானியருடன் இயன்றவரையில் இணக்கமாக நடக்க முயன்றும் யப்பானியர் அதற்குச் சிறிதும் இடங்கொடுத்தலின்றிப் போர்க் கறை கூவுகின்றனர்; தாம் போருக்குப் புறப்பட்டால் பிருத்தானியர் பிரான்ஸியர் அமரிக்கரென்னும் மூன்று ராச்சியத்தினரும் தம்முடன் மாறுபடுவரென்பது ஜப்பானியருக்குத் தெரியும்; தெரிந்தும் அவர்கள் அப்படி நிற்பது ஜர்மனிய இத்தலிய சர்வாதிகாரிகள் இருவரும் யப்பானியராகிய தமக்குத் துணையாக நிற்கின்றனரென்ற "மிடுக்"கினுலல்லவா? பிருத்தானியர் சீனருக்கு எவ்வாற்றாலும் உதவி செய்யாது அவர்களுடன் மாறுபட்டு நின்றாற்றான் தம்முடைய சகாயம் பிருத்தானியருக்குக் கிடைக்குமென் யப்பானியர்பல முறை கூறியிருக்கின்றார்கள். யப்பானியர் பிருத்தானியருடைய கௌரவத்திற்குப் பங்கமான கருமங்களைப் பலமுறை செய்தள்ளனரெனவும் இன்னமுஞ் செய்கின்றார்களெனவும் இப்படிச் செய்யவிடுவது முறையல்லவெனவும் உடனுக்குடன் அவர்களை அடக்கவேண்டுமெனவும் பிருத்தானிய பாராளுமன்றத்தினர் பலர் கூறி, பிருத்தானிய மந்திரி இன்னமும் இவ்விஷயத்திற் பொறுமை காட்டுவதைக் கண்டிக்கின்றனர்; ஆங்கில பத்திரிகைகளும் இப்படியே ஒலமிடுகின்றன; இனி யப்பானியரெனிலோ சீனத் தேசத்தில் அந்த அயிரோப்பியருக்கும் அமரிக்கருக்கும் என்ன அலுவல், சீனத்தேச விவகாரங்களை எங்களோடு விட்டு விட்டு அவர்கள் வந்தவழி நோக்கிப் போகவேண்டியதுதான் என்று கூறுகின்றனராம்.

இனி, நேற்று இன்று வந்த த ந் தி ச் சமாசாரங்களைக் கொண்டு யப்பானியருடைய நோக்கம் நன்கு அறியக்கிடக்கின்றது; யப்பானியர் சீனத்திலிருந்து அயிரோப்பிய ராச்சியத்தினரையும் அமரிக்கரையும் அறவே அகற்றிவிட வேண்டுமென்ற நோக்கத்துடன் துரிதமாக வேலைபார்க்கின்றனர். சீனத்தோடு தாங்கள் நீடித்த காலமாக யுத்தஞ் செய்தும் அங்குள்ளாரை முற்றாக வெல்ல முடியாமலிருப்பதற்குக் காரணம் மேனுட்டு ராச்சியத்தினரும் அமரிக்கரும் சீனசேனபதியாகிய சியாங்கேஷெய்க் என்பவருக்குப் பலவகையாலும் துணைபுரிதலினுலேயே என்று யப்பானியர் இப்பொழுது தெரிவித்திருக்கிறார்கள்; "இந்த அயிரோப்பிய அமரிக்க அதிகாரிகளைச் சீனத்தில் இடங்கள் தோறும் குடியிருக்கவும் தொழில் பார்க்கவும் விட்டபடியாற்றான் யப்பானியராகிய எங்களுக்கு மாறுக அவர்கள் சீனசேனுதிபதிக்குத் துணைபுரிகின்றனர்; இவர்களை உடனுக்குடன் சீனத்தினின்றும் கலைத்துவிடல் வேண்டும்" என்று யப்பானிய அரசாங்கத்துக்குரிய பத்திரிகையொன்று வெளியிடுகின்றதாம. "எங்களுடைய உண்மையான பகைவர் சீனரல்லர்; பிருத்தானியரும் பிரான்ஸியரும் அமரிக்கருமேயாவர்" என்று இன்னெரு பத்திரிகை கூறுகின்றதாம்.

இப்பொழுது வெளிவந்துள்ள சமாசாரங்களை நோக்குமிடத்து, பிருத்தானிய பிரான்ஸிய அமரிக்கருக்கும் யப்பானியருக்குமிடையில் எவ்வித உடம்படிக்கையும் வாராது யுத்தமே மூளுமென அறியக்கிடக்கின்றது. ஏதும் யுத்தம் மூளுமானல் யப்பானுடன் ஜர்மனியும் இத்தலியும் சேர்ந்து கொள்ள, சீனத்துடன் பிருத்தானியர் பிரான்ஸியர் ருஷியர் அமரிக்கர் என்னும் இச்சாதியார் சேர்ந்து கொள்வரென்று நம்பக்கிடக்கின்றது; விரைவில் யுத்தம் வரக்கூடுமென்ற நோக்கத்துடன் இரு பகுதியாரும் தங்கள் கடற்படை தரைப்படை முதலியவற்றைப் பெலப்படுத்தி அரண் செய்யத் தொடங்கியிருக்கின்றார்கள். மத்திய ஆசியாவிலே ஹேர் ஹிட்லர் செய்யும் யுத்த முயற்சிகள் பல. இவைகளையெல்லாம் உற்றுநோக்குமிடத்து இரண்டாவதான அகில உலக யுத்தம் எப்போது மூளுமென்றுசொல்ல முடியாமல் எந்நேரமும் திகிலுடனுடனும் கலக்கத்துடனும் உலக மக்கள் இருக்கவேண்டி ஏற்பட்டுவிட்டதென எண்ணக்கிடக்கின்றது.

## சண்டிருப்பாயிற் படுகாயம்

### கொடுக்கல்வாங்கற் பிணக்கு குத்துச் சண்டையில் முடிந்தது

### எதிரிக்கு 2மாதக் கடுழியமும் 200 ரூபா அபராதமும்

சண்டிருப்பாயில் வசிக்கும் வயிரமுத்து-கந்தசாமி என்பவர் அவ்வூர் அம்பலவாணர் - இரத்தினசபாபதி என்பவருக்குச் சென்ற பிப்ரவரி மாதம் 24ந்தேதி ஓர் வெட்டும் ஆயுதத்தால் வெட்டிப் படுகாயமுண்டாக்கியதாகக் குற்றஞ்சாட்டியவழக்கு விசாரணைக்கு யாழ்ப்பாணம் கோட்டில் எடுக்கப்பட்டது.

வழக்கின் சாராம்சமாவது:— அம்பலவாணர் - இரத்தினசபாபதி குறித்த தினத்தன்று சங்கோதரி வீட்டிலிருந்து தன்னுடைய வீட்டிற்குப் பிற்பகல் 5 அல்லது 5-30மணிவரையிற்சென்றுர் இவர் தனது வீட்டிற்குமேற்கூறிய எதிரியின கடையைக் கடந்துதான் போகவேண்டும். இவர் எதிரிக்கு இரண்டு ரூபாவரையிற கொடுக்குமதியாயிருந்தார். இவர் எதிரியின கடையடியிற் போனபோது எதிரி தமக்கு வருமதியான காசைக்கேட்டார். இரத்தினசபாபதி தன்னிடத்தில் அந்தநேரம் காசு இல்லையென்றும் தன்னுல் அப்பொழுது தரமுடியாதென்றும் சொன்னுர். எதிரி இவரை வையத்தொடங்கினர். இரத்தினசபாபதியும் திருப்பி அவரைவைதார். எதிரி "நீ இப்போதுகாசு தராமாட்டாயோ" வென்று சொல்லிக்கொண்டு கடைக்கு வெளியே வந்து ஓர் வெட்டுமாயுதத்தால் (வாளால்) இடது பக்கத்துக் கன்னத்தில இரத்தினசபாபதிக்கு வெட்டினர். இரத்தினசபாபதி ஐயோவென்று சத்தமிட்டுக்கொண்டு ஓடினர். எதிரி அவரைப் பின்தொடர்ந்து திரும்பவும் இரண்டு வெட்டுகளை வெட்டினர். காயக்காரன் அறிவுமயங்கி நிலத்தில் விழுந்துவிட்டார். இச்சம்பவம் விதானையாருக்கு அறிவிக்கப்பட்டது. எதிரி அவ்விடத்தைவிட்டு ஓடிவிட்டார். காயக்காரன் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

இவ்வழக்கு விசாரணை செய்யப்பட்டபின்னர், நீதிபதி எதிரியைக் குற்றவாளியெனக் கண்டு இரண்டு மாதக்கடூழிய மறியல் தண்டனையும் 200 ரூபா அபராதமும் இறுக்கும்படி. ம பணம இறுக்கத் தவறிஞல் நாலுமாதமறியல தண்டனையுமனுபவிக்க வேண்டுமென்று கூறினர்.

ஈ-தி

## சன்மார்க்க நிலயம்

சுத்தமட்டத்திலுள்ள தொழிற்சாலையில் வேலைசெய்யும் சுருட்டுத் தொழிலாளரின் அன்ம இலட்சியத்தை உத்தேசித்து மேற்படி பெயருடைய ஒரு சபை சென்ற சித்திரைமாதம் 7ந்தேதி கந்தர்மடத்தடியில் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. இச்சபையின் ஆதரவில்ஒழுங்குவாரமேறாதும் அறிவாளிகளை அழைத்து சமயவிஷயங்களைப்பற்றிய பல பிரசங்கங்கள் நடைபெறுகின்றன. வைகாசியில் ஏழ்பது அங்கத்தவர் வரையில் சமய தீட்சை பெற்றனர். இன்று இரவு வில்வாசி ஸ்ரீமான். க. வடிவேலு அவர்களால "மனிவாசகப்பெருமானின் மாட்சி" என்னும் விஷயமாக ஒரு சொற்பொழிவு நிகழ்த்தப்படும்.

கடிதம்

## ஆஸ்பத்திரியில் தற்கொலை

### தாதிமீது மோகம் காதலே காரணமா?

சென்ற செவ்வாய்க் கிழமையன்று காலை கொழும்பு பாலத்துறையிலுள்ள ஆகாமஜ் லக்மாஸ்ஜி பிரசவ ஆஸ்பத்திரியைச் சேர்ந்த திரு C. வேலாயுதன் என்பார் ஒருவகை நச்சுத் திராவகத்தை உட்கொண்டு உயிர்நீத்தார். பிரேதப் பரிசோதனையில அவரது மனைவி தெரிவித்ததாவது:- நானும் என்புருஷனும் ஆஸ்பத்திரியின் மேல்மாடியில் வசித்துவந்தோம். நாங்கள் ஏழு வருஷங்களுக்குமுன் விவாகஞ் செய்துகொண்டோம்.

சமீபத்தில், அவர் ஆஸ்பத்திரியிலுள்ள ஒரு தாதிமீது காதல்கொண்டு அதனல் சிறிது மனக்குழப்பமடைந்திருந்தார். சென்ற சனிக்கிழமையன்று அத்தாதியின் கையை அவர் பற்றிக்கொண்டுநின்றதை நான் கண்டமையால், அவர் வீட்டுக்கு வந்ததும் நான் அதுபற்றி அவரைக் கடிந்துகொண்டேன்.

### காதலை ஒப்புக்கொண்டார்

அவர்தான் அந்தத் தாதிமீது காதல் கொண்டிருப்பதாகவும், அவளை வீட்டுக்கு அழைத்து வரப்போவதாகவும், என்னிலும்பார்க்க அவளையே முதற காதலிப்பதாகவும் கூறி என்னையும அவளோடு சகோதரமாக இருக்குமாறும் கேட்டுக்கொண்டார். நான் அவரைப்பார்த்து எங்களுக்குக் குழந்தைகள் இரண்டிருக்கின்றன அவற்றையும் என்னையும் பாதுகாக்கவேண்டிய கடமையிருக்கும் போது இத்தகைய புத்தியீனமான செயல்களைச் செய்தல் தக்கதல்லவென்று நான் கூறினேன். எனது சுந்தரத்தாரும் அவ்வாறே ஆலோசனை கூறினர். அவர் அதற்கு இணக்கமைகண்டு, நான் யாழ்ப்பாணம்போகிறேன், நீங்கள் உங்கள் விருப்பத்திற்கு நடவுங்கள் என்னையும் என் பிள்ளைகளையும் பார்க்க விருப்பமாகும்போது வந்து பார்த்துக்கொள்ளுங்கள் என்றேன். அன்றியும் அவளது (தாதியின்) முகத்தையும் நான் பார்க்கமாட்டேன் என்று உறுதியாகச் சொன்னேன். நான் சண்டையிட்டதே கிடையாது நான் அழுதுமாத்திரமுண்டு. பின் அவர் தற்கொலைசெய்ய எண்ணியிருப்பதை அறிந்திருந்தால் நான் என்னுயிரன்று மட்டும் அவ்வாறு செய்ய வேண்டாமென்று அவரை வேண்டிக்கொண்டேன்."

குறித்த தாதி விசாரிக்கப்பட்டபோது தனக்கும் திரு. வேலாயுதனுக்குமிடையில் எவ்வித நட்புமிருக்கவில்லையென்று கூறினுள்.

விசாரணையின்பின் மரண விசாரணைக்காரர் திடீரென ஏற்பட்ட மனக்கலக்கங் காரணமாகச் செய்துகொண்ட தற்கொலை எனத் தீர்ப்புக் கூறினர்.

## சுருட்டுப்பெட்டிக்குள் அபின்

### எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர்

கோகிலவில்லைச் சேர்ந்த வண்டிக்காரனியான் இராமன் சுருட்டுப் பெட்டிகளைக் கோகிலவில் ஸ்டேஷனுக்குக் கொண்டு சென்றன். பெட்டிகளை V. விநாயகமூர்த்தி பெருத்து வாசாமல் முடிப்பித்த பின்னர் மதுப்பரிசோதகர் R. A. வைத்திய லிங்கமும் அவரைச் சேர்ந்தவர்களும் அவ்விடம் சென்று அச் சுருட்டுப் பெட்டிகளைத் திறந்து சோதித்தபோது ஆனை இறாத்தல் அபின் இருக்கக் கண்டனர். வண்டிக்கார இராமனமீதும் விநாயகமூர்த்தியின் மனைவியார் பொன்னம்மாமீதும் அபின் வைத்திருந்ததாகக் குற்றஞ் சாட்டி வழக்குத் தொடரப்பட்டது. நீதிபதி விசாரணையின் பின் எதிரிகள் இருவரையும் குற்றவாளிகளல்லவெனக் கண்டு விடுதலை செய்தார்.

த. நி.

## வரியிறுப்போர் மத்திய சங்கக் கூட்டம்

யாழ்ப்பாண நகர வரியிறுப்போர் மத்திய சங்கத்தின் கூட்டமொன்று நிகழும் பிரமாதி ௵ ஆவணி ௴ 8ந்தேதி (22-6-39) வியாழக்கிழமை பி ற் ப க ல் 6 மணியளவில் 1941ம் ஆண்டு முனிசிப்பாலிட்டி வரிமதிப்பு வழிவகைகளைத் தேடும்நோக்கமாக நல்லூர் மனையர்க்காசி வித்தியாசாலையில் நடைபெறும்.

காரியதரிசி

## தயவுசெய்து எமக்கெழுதுங்கள்!

தூய்மையான கஸ்தூரி, சுத்தமான காஷ்மீர்க் குங்குமப்பூ, பரிசுத்தமான முத்து, சுத்தமான கோரோசனை, ஸிலாசத்து, அம்பர்கிரீஸ், பச்சைக் கர்ப்பூரம், பொன் வெள்ளி இலைகள் இவைபோன்ற வேறு விலையுயர்ந்த பொருள்களும் மருந்து வகைகளுக்கு வேண்டிய அருமையான மூலிகைகளும் தேவைப்படும்போது எங்களுக்கு எழுதுங்கள். பிரசித்தி பெற்ற டாக்டர்களும் வைத்திய நூலறிஞர்களும் எமது சாக்குகளை ஆராய்ந்து அவை மிக்க திருப்தியளிப்பவை என்றும் நிறமானவையென்றும் கண்டிருக்கின்றனர். அரசாங்க ஆஸ்பத்திரிகளுக்கும் மகாராஜாக்களின் பிரதான டாக்டர்களுக்கும் நாமே இவற்றை உதவி வருகிறோம்.

பூரண விபரங்களை அறிய விரும்புவோர் கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுதுக:-

பாலா பிரதர்ஸ் (ரிஜிஸ்டர் செய்யப்பட்டது)
கஸ்தூரி & பெருங்காய வியாபாரிகள், ஆயுர் (ஜலந்தர்) பஞ்சாப்.

(Y. 64. 14-6-39—13-6-40)

## பணப்பையைப் பறித்த எதிரி

### 9 மாதக் கடுங்காவல் தண்டனையும் 2 வருஷப் போலிஸ் காவலும்

கொக்குவிலில் வசிக்கும் சிங்கப்பூர் பென்சனர் M. சிதம்பரப்பிள்ளை கச்சேரியிலிருந்து தமக்குரிய பென்ஷன்பணம் ரூபா 55 சதம் 41 யும் எடுத்துக்கொண்டு வீடு திரும்பி வந்தார். வழியில் அவர் சின்னத்துரை என்பவரைச் சந்தித்தார் சின்னத்துரைக்குக்கொடுக்கவேண்டியகாசைக் கொடுத்து விட்டு மிகுதி ரூபா 33 யும் கொண்டு ஓர் ஒழுங்கை வழியால் தனது வீடு சென்றார். அப்போது கொக்குவிலில் வசிக்கும் கந்தையா-இளையதம்பி வந்து அவரைச்சந்தித்து அவரிடம் தனக்கு டிஸ்ரிக் கோட்டில் நடக்கும் வழக்கிற்கு அப்புக்காத்து வைப்பதற்குப் பத்து ரூபா கடன்கேட்டார். சிதம்பரப்பிள்ளை காசைக்கொடுக்க மறுத்தார். ஆகவே இளையதம்பி அவருடைய(சிதம்பரப்பிள்ளையின்) மடியிற் பணத்தோடு இருந்த பேர்ஸை இழுத்துப் பறித்துக்கொண்டு ஓடிவிட்டான்.

கந்தையா - இளையதம்பி கொக்குவிலில்வசிக்கும் M. சிதம்பரப்பிள்ளையிடமிருந்து ரூபா 33 கொண்ட ஒரு காசுப்பையைப் பறித்துக்கொண்டோடியதாகக் குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டு விசாரணையின் பின் நீதிபதி எதிரியைக் குற்றவாளியெனக் கண்டார். எதிரிதான் முன்னரும் நாலு முறை இப்படியான குற்றச் சாட்டின்கீழ் குற்றவாளியாக்கப்பட்டதை ஒத்துக் கொடுத்தான். நீதிபதி எதிரிக்கு ஒன்பது மாதக் கடுங்காவல் தண்டனையும் இரண்டு வருஷப் போலிஸ் பாதுகாவலுமெனக் கூறினர்.

ஈ-தி

## சைவக் கைதிகளுக்குத் தாவர உணவு

வெலிக்கடைச் சிறைச்சாலையிலுள்ள சில சைவக் கைதிகள் விசேஷ தினங்களில் தங்களுக்கு மாசுத்தாவும் சோறுத் தாவர உணவு போசனம் அளிக்க வேண்டுமென வேண்டிக் கொண்டதன் பேரில் உள்நாட்டுக் காரிய நிர்வாகஸ்தர் அதற்கு அனுமதியளித்திருக்கிறார்கள்.

## விசேஷ விஞ்ஞாபனம்

இந்துசாதனப் பொன்விழா நிதியின்பொருட்டுப் பணஞ் சேர்ப்பதற்கும் இப்பத்திரிகைக்குப் புதிய அபிமானிகளைச் சேர்ப்பதற்குமாக உத்தேசித்து வருகிற வெள்ளிக்கிழமை (23-6-39) இப்பத்திரிகையின் ஆசிரியரும், இன்னுஞ் சிலரும் வடமராட்சிப் பகுதிக்கு வரவிருப்பதால் ஆங்காங்குள்ள அபிமானிகள் தங்களால் இயன்ற பொருள் உதவியும் புதிய அபிமானிகளைச் சேர்த்து உதவியும் துணைபுரிவார்களென எதிர்பார்த்திருக்கின்றோம்.

வண்ணார்பண்ணை
இந்துசாதனுலயம் } 22-6-39

ச. அருணலிங்கம்
மனேஜர்.

## கத்திக்குத்தால் மரணம்

### சகோதரர்கள் சச்சரவில் தலையிட்டவரின் கதி

அலிசாவிலா ஜூன் 19

கொனலிலக் கிராமத்தைச் சேர்ந்த ஆர். ஏ. அப்புசிங்ஞோ என்ற ஒரு வியாபாரி சென்ற சனிக்கிழமை கத்தியாற் குத்தப்பட்டுக் கொல்லப்பட்டார். கொனலில என்ற கிராமம் ருவான்வெல்லைப் பொலிஸ் எல்லையிலுள்ளது. இரு சகோதரர்கள் சச்சரவிட்டுக் கொண்டிருக்கையில், குறித்த அப்புசிங்ஞோ தலையிட்டதால் அவருக்கு இக்கதி நேரிட்டது.

அலிசாவிலா நீதிபதி சம்பவம் நடந்த ஸ்தலத்திற்கு விஜயம் செய்து விசாரணை நடத்தினார்.

கத்தியால் குத்தியதாகக் கூறப்படும் எதிரி எம். செலனிஸ் என்ற பொடிக்கொல இப்பொழுது தலைமறைவாக ஆயிருக்கிறார்.

இக்கத்திக்குத்துச் சம்பந்தமாகக் கூறப்படும் விபரம் வருமாறு:—

வாக்குவாதம் ஆகிட்டிசிகல ரேட்டித்தாலு சென்ற அப்புசிங்கோ வந்த நேரம் கடை இருந்தது. எதிரிக்கும் அவருடைய சகோதரனான ஜீயா என்பவருக்குமிடையில் அக் கடை முன்பாக வாக்குவாதம் ஏற்பட்டது. உடன் அப்புசிங்ஞோ தலையிட்டு அந்த இடத்தில் மிக்க கௌரவமான பெண்கள் இருப்பதால் துஷ்டமான வார்த்தைகளை உபயோகிக்கக் கூடாதென்று சொன்னார்.

எதிரி ஒரு குடிகாரப் பேர்வழியாம். அச் சமயத்தில் குடித்திருந்தாராம். தன் அருகில் நெருங்கக்கூடாதென்று எதிரி அவரை எச்சரித்தார். அப்புசிங்ஞோவோ அந்தப் பயமுறுத்தலை அலக்ஷியம் செய்துவிட்டு, அவர் அருகில் நெருங்கிப்போகவும் கத்தியாற் குத்தப்பட்டார். அப்புசிங்ஞோ உடனே கரவனெல்ல ஆஸ்பத்திரிக்கு அவசரமாக எடுத்துச்செல்லப்பட்டார். அங்கு அவர் சில மணி நேரத்திற்குப்பின் மரணமானார்.

எதிரிக்கும் காலஞ்சென்றவருக்குமிடையே மனஸ்தாபமெதுவும் கிடையாதென்று சொல்லப்படுகிறது.

சப் இன்ஸ்பெக்டர் ஆர். வி. டி. டீ. ஸ் விசாரணை நடத்திவருகிறார்.

எதிரியைக் கைது செய்ய ஒரு விறுந்து பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

---

## தள்ளு வண்டியில் திருட்டு

### எதிரிக்கு 2 மாதம்

21-6-39

சுளிபுரத்தில் வசிக்கும் காசன் தம்பன் என்பவன் கொட்டடியில் வசிக்கும் பெரியான்-மாணிக்கம் என்பவனுடைய ரூபா 25 பெறுமதியான ஒரு சன்று வண்டிலைக் களவாடியதாகத் குற்றஞ்சாட்டிய வழக்கில் நீதிபதி எதிரியைக் குற்றவாளியெனக் கண்டு இரண்டு மாதக் கடூழிய மறியல் தண்டனை விதித்தார். (சமதந்திருபர்)

---

## சிரியுங்கள்

சிரிப்பினால் ஏற்படக்கூடிய சில நற்பயன்களை மெக்கீ என்பவர் 'மெடிக்கல் டைப்' என்னும் பத்திரிகையில் விவரித்திருக்கிறார். அவர் சொல்லுவதாவது:-

சிரிப்பு உலகில் அருமையாக இருந்து வருகிறது. இருந்தாலும் பலர் நன்றாகச் சிரிக்கும்படி வைத்தியர்கள் சிர்ப்பந்தித்துச் சொல்லவேண்டியது அவசியமாக இருந்து வருகிறது. திடீரென்று வேடிக்கைப் பேச்சு ஏற்பட்டால் சிரிப்புத் தானாகவே அதிகமாக ஏற்படுகிறது. இதனால் சுவாசாசயங்களில் காற்றோட்டம் மேற்படுகிறது. இருதயத்தில் உத்வேகம் உண்டாகிறது; இரத்தம் சரீரமெங்கும் சென்று எல்லா உறுப்புகளும் நன்றாக வேலை செய்யும்படி தூண்டுகிறது. எக்காரணத்தினாலாவது மிகுந்த சஞ்சலமடைந்தவர்களாவது, தங்களைப் பற்றியே நினைத்துக் கொண்டிருப்பவர்களாவது, சிரித்துப் பார்க்கும்படி சொல்லப்படாவிடின், அவர்களைத் திருத்துவதற்கு வாய்த்த நல்ல ஒரு சந்தர்ப்பம் நழுவ விடப்பட்டதாகும்.

சிரிப்பினால் சரீரத்திற்கு மாத்திரந்தான் அனுகூலம் ஏற்படுகிறதென்பதில்லை, மனத்திற்கும் அதனால் நன்மை ஏற்படுகிறது. இது சம்பந்தமாகப் பல்வித விஷயங்கள் சொல்லப்படுகின்றன. பிணியாளிகள் அடிக்கடி சிரிக்கும்படி உபதேசிப்பதால் நல்ல பலன் இருக்கிறது. 'சிரித்துக் கொழு" என்ற புராதனப் பழமொழி ஒன்றுண்டு. நன்றாகச் சிரித்துக்கொண்டிருக்கிறவர்கள் வெகு சுலபமாகக் கொழுத்து வருவதை நாம் அனுபவத்தில் காண்கிறோம். இதற்கு மாறானதும் உண்மை தான். அதாவது கொழுத்தால் சிரிப்பு தானாகவே வருமென்பது. மெலிந்த சரீரசன் சிரிப்பது அபூர்வமாக இருக்கிறது. அவர்கள் முகத்தில் சிரிப்புத் தவழ்வதில்லை. ஆனால் கொழுத்தவர்கள் எப்பொழுதும் சிரிக்கிறார்கள்: ஆரோக்கிய தீபிகை.

## உலகம்பலவிதக் கதை

### இந்த அரிவை யாரோ?

இராசசேகரன் மீண்டு அறைபுட் சென்று தன் உடைகளை மாற்றினான். அயலிலிருந்த சாய்மனை நாற்காலியில் மெல்லச் சாய்ந்திருந்தான்; இப்படியான ஒரு நிகழ்ச்சி அவன் சிறிய காலத்தில் அன்றுதான் முதன்முதல் நேர்ந்தது எனலாம்; "இது என்ன புதுமை; எனக்கு ஒன்றும் புலப்படவில்லையே; இந்த அழகிய கன்னிகை யாரோ; இவள் குலமகளோ, இல்லையேல் வேறுமகளோ? சே! வேறுமகளென நான் சந்தேகங்கொள்வது பெரும் பாதகம்; குலமகட்குரிய செய்கைகளெல்லாம், குணங்களெல்லாம் இவளிடத்திற் காணப்படுகின்றன. நாட்டுப் புறத்தில் பிறந்து வளர்ந்த எனக்கு இக்காலத்து மகளிர் இப்படிச் செய்தல் ஆதனமாகவே யிருக்குமல்லாமல், இந்தப் பெரிய பட்டினத்திற் பிறந்து வளர்ந்து பயின்றவர்களுக்கு இது புதுமையாக விராது. அல்லாமலும் அந்த ஆரணங்கு தன் தாய் தகப்பன் தலைமைத் தேடுவார்களென்று சொல்லிவிட்டு அவசியமாகப் போகிறாள்; அப்படிப்பட்டவளை, என்னுடன் மிக்க மரியாதையாக நடந்தவளைக் குலமகளென்பதில் நான் சந்தேகப்படலாமா? இராமனைக் கண்ட பின்பே சதத்தினின்றும் இறங்கி என் பிடிநிக்குள் வந்தாள்; குலமகளாயினும் எனக்கு இவள் இவ்வளவு இரமாக நடக்கக் காரணமென்னவெனத் தெரியவில்லையே; நான் இவளை அறியாமலிருக்க இவள் என்னை இனமறிவான அறிந்துகொண்டாளோ: இப்பட்டினத்திலும் எங்கள் இனத்தவர் சிலர் இருக்கிறார்களென்றும் ஆனால் அவர்களுடன் தாங்கள் இப்பொழுது கொண்டாடுவதில்லையென்றும் என் பெற்றோர் ஒருமுறை பேசக் கேட்டிருக்கின்றேனே; அந்த இனத்தவர்களுள் இக்கன்னிகையும் ஒருத்தியாக இருத்தல் கூடுமோ? "என்னைப் பின்னர் அறிவீர்கள்" என்றாள்; அவள் அப்படிச்சொன்னதில் ஏதோ மர்மம் இருக்கவேண்டும்; ஆ! இந்த உத்தமியின் பொழுதுதான் இருந்தபடியென்னே! (இதற்கிடையில் ராமன்) "ஐயா, போஜனம் ஆயத்தமாயிருக்கிறது; வாருங்கள் எனக்கும் பசிக்கப்பார்க்கிறது;" எனவும் "ராமா! இப்பொழுது எனக்குப் பசிக்கவில்லை. தாகமாயிருக்கிறது; தாகத்திற்கு ஏதும் கொண்டு வந்து தந்துவிட்டு நீ பசியாறு; என்னைப் பற்றிப் பார்க்கவேண்டாம்; நான் சற்றுச் சென்ற, போசனஞ் செய்கிறேன்" என்று இராசசேகரன் சொன்னான். "எனக்குப் பசியில்லை ஐயா; உங்களை உண்ணப்பண்ணுவதற்காகவே அப்படிச் சொன்னேன்; நீங்கள் உண்டபின் தானும் உண்பேன்; தாகத்திற்கு என்ன கொண்டுவர? தேநீரா? காப்பியா? சோடாவா? சர்பத்தா? லெமனேட்டா? இளநீரா? வேறேதுமா?" என்று ஒன்றன் பின் ஒன்றாக இடைவிடாமல் கேட்டான்; இராசசேகரன் சிரித்துவிட்டு, "இவைகளெல்லாம் உன்னிடத்தில் உண்டா?" "இல்லை ஐயா, எதிரிலிருக்கும் கடையில் எல்லாம் உண்டு; என, "சரி குட்டோடு காப்பி வாங்கி வா" என்று அவன் சொல்ல, இராமன் அப்படியே வாங்கிக்கொண்டு வந்து கொடுக்க அவன் தாகசாந்தி செய்துவிட்டுப் பின்னரும் சிந்திக்கலாயினான்;

### பெண்ணிற்கணிகலமோ? பேரழகிற்கோர் உருவோ?

சற்று முன்பு நடந்தவையெல்லாம் எனக்கு ஏதோ தோன்றி மறைந்தது போலல்லவா இருக்கின்றன; காலமணி நேரத்தில் நடந்தவை அத்தனையும் கனவுபோற் புலப்படுகின்றதே! பரிட்சையிற் சித்தியடைவேனோ அல்லவோ என்று சஞ்சலப்பட்ட என்னெஞ்சம் அதை மறந்து இந்த விஷயத்திற் சஞ்சலப்படுகின்றதே! ஆ! அக்கன்னிகை சற்றேனும் என் கண்ணைவிட்டகன்றுமோ இல்லை, அவளுடைய உருவம் என் மனத்தை விட்டகலாது மனத்திற் குடிகொண்டுவிட்டதே! பின்னித் தொங்கவிட்ட கூந்தல்; அட்டமிச் சந்திரனையொத்த நெற்றி; அதில் இட்ட சாந்துப்பொட்டு; முழுமதியொத்த முகம்; என்ன விழிகள்; அவள் தன் மூக்கில் மாட்டியிருந்த கண்ணாடியை ஒருமுறை கழற்றி எடுத்தாளல்லவா? அந்தச் சில நிமிஷத்தில் வேலையுஞ் சேலையும் நிகர்த்த அவள் விழிகள் தம் கடமையைச் செய்துவிட்டன! அவள் நோக்கு என் உள்ளத்திற் புதைந்துவிட்டது. தன் விழிகளை அந்த கண்கைக்கண்ணாடியிட்டு மறைத்திருப்பதற்குக் காரணம் என்ன வென்பது இப்பொழுது தான் எனக்கு விளங்குகின்றது; அவள் விழிகளுக்கு வந்த குறை யாதுமில்லை. விழிகள் எப்போன்ற வாலிபரை ஒருமுறை உறைக்கப் பார்த்துவிட்டுப் போய்விடும்; அவ் விழிகளாற் பார்க்கப்பட்டோர்கள் எல்லவோ காட்கணக்கில், மாசக்கணக்கில், வருடக்கணக்கிற் கிடந்து தயங்கவேண்டி வரும். பூவையுங் கிளியையும் இவள் கொஞ்சுகிறாள் இல்லை; இங்கு வரும்போது அன்னமென நடந்து, குயிலெனப் பேசி, மயிலென ஒதுங்கி நின்றாளே; இவைகள் இவளிடத்து மாத்திர முண்டா? இல்லையேல் மெல்லியலவர் எல்லாரிடத்தும் உண்டோ? எனக்கு ஒன்றுந் தெரியவில்லையே! எங்கள் தமிழிலேயுள்ள புராணங்கள் இதிகாசங்களிலே பெண்களைப் பற்றி பலவிதமாய் வர்ணித்திருக்கிறார்கள்; அவையெல்லாம் பொய் புனைந்து என்று எண்ணியிருந்தேனே; அந்தப் புலவர்களைப் போலப் பாட்டுப் பாடும் திறமை என்னிடத்திருந்தால், அவர்கள் பாடியவைகளைக் காட்டிலும் பன்மடங்கு இவளைப் பாராட்டிப் பாட்டிசைத்திருப்பேனே! நாம் ஒன்றையும் நன்கு அறியமுந்திக் குறைகூறுவதோ என்னுடு. இவைகளையெல்லாம் என்னால் மறக்க முடியவில்லையே! இவைகளைத்தான் மறந்தாலும் தானாக இங்கே வந்து, நான் இருந்த பின்னரைத் தானிருக்கவொண்ணாதென்று எனக்கு நாற்காலியிடுவித்து என்னை இருக்கச் செய்த பின் தான் உட்கார்ந்த ஆதரவையும், பெற்றோர் தேடுவார்கள், என்னை இன்னாரெனபதைப் பின்பு அறிவீர்கள்; போய் வருகிறேன்' என்று சொன்ன இனிய மொழிகளையும் என்னால் எப்போதாயினும் மறக்க முடியுமோ?

### "பசிக்காதையா"

"ஐயா! நேரமோ இரண்டு மணியாகின்றது; இன்னமும் உண்ணாமல் இருக்கலாமா? இப்பொழுது உண்மையாக எனக்கும் பசியதிகமாக விருக்கிறது; ஐயா, போசனத்திற்கு எழுந்திருங்கள்" என்றான் ராமன்.

இராசசேகரன்:- ராமன், என்னவோ எனக்கு இன்றைக்குக் கொஞ்சமும் பசிக்கவில்லை; அப்படிப் பசியாததற்கு நியாயமுந் தெரியவில்லை; வயிற்றில் வாய்வு உண்டாய் விட்டதோ தெரியவில்லை: தாகந்தான் அதிகமாக விருக்கிறது: ராமன், நீ போய்ப் பசி ஆறு; வீணாக நீ என் பட்டினி கிடக்கிறாய், நான் சற்று நேரஞ் செல்ல ஏதும் உண்ணுகிறேன்.

ராமன்: ஐயா, வயிற்றில் இத்தனை காலும் உண்டாகாத வாயு இப்பொழுது உண்டான தென்று சொல்லலாமா? வயிற்றில் ஒன்றும் உண்டாகவில்லை; மனத்திலேதான் ஏதோ உண்டாய்விட்டது. இனிப் பசிக்கத்தான் மாட்டாது (என்று புன்னகையுடன் சொன்னான்)

இராச: (புன்சிரிப்புடன்) ஏன் அப்படிச் சொல்லுகிறாய்?

ராமன்: நான் சும்மா சொன்னேன் ஐயா, அது கிடக்க, நீங்கள் கூட்டிக்கொண்டு வந்த அந்தப் பெண்பிள்ளை ஆர் ஐயா?

இராச: உண்மையாய் எனக்கு இன்னுமொன் அறிவில்லை; மேலும் அந்தப் பெண்ணை நான் இங்கே கூட்டிக்கொண்டு வரவில்லை; அவள் தான் என்னை இங்கே கூட்டிக்கொண்டு வந்துவிட்டாள், அந்தப் பெண் ஆர் என்பதை விட்டுத் தான் யோசித்துக்கொண்டிருக்கிறேன் ராமன்;

ராமன்: ஐயா, அந்தப் பெண்ணைப் பற்றித்தான் போசனமுஞ் செய்யாமற் பசியுடன் இருந்து யோசிக்கிறீர்கள் என்பதை முந்தியே அறிவேன். ஐயா, நீங்கள் மூன் பின் அறியாத ஒரு பெண், அதிலும் ஒரு குமரிப்பிள்ளை உங்களை உங்கள் விடுதியிற் கூட்டிக்கொண்டு வந்துவிட்டாள் என்று நீங்கள் சொல்லுகிறீர்கள்; உங்கள் வேலைக்காரனாக இருக்கிறபடியால் நான் நம்பத்தான் வேண்டியிருக்கிறது. ஆனாற் பிறர் உங்கள் சொல்லை எள்ளளவும் நம்பமாட்டார்கள். ஐயா, நான் ஊருக்கு மீண்டு போகும்போது பெரியையாவுக்கு அல்லது எங்கள் அம்மாவுக்கு இவைகளைப் பற்றி ஒன்றுஞ் சொல்லமாட்டேன். ஆனால் எனக்கு மாத்திரம் உண்மையைச் சொல்லிவிடுங்கள்; அந்தப் பெண்ணை இன்னாரென்று தெரியவில்லையென்கிறீர்களே; அந்த அம்மாள் போகும்போது நீங்கள் ஏதோ கேட்க ஒரு "கார்ட்" தந்துவிட்டுப் போனாளே. அதில் ஒன்றும் எழுதப்பட்டிருக்கவில்லையா? அல்லது அதை இன்னமும் படித்துப் பார்க்கவில்லையா?; ஐயா, நெஞ்சையொளித்தொரு வஞ்சகமில்லை என்று அந்த நாளில் நானுங் கொஞ்சம் படித்திருக்கிறேன், பொய்யைச் சொன்னாலும் பொருந்தச் சொல்லவேண்டுமென்றல்லவா சொல்லுவார்கள்.

இராச: ராமன், நான் பொய் சொல்லவில்லை; உண்மையாய் அப் பெண்ணை நான் இன்னாளென்று அறியேன்; அவள் தந்த அந்தக் காட்டில் அவளுடைய பெயரும் வீட்டு இலக்கமும் இடப்பட்டிருக்கிறது. வீடும் எவ்விடத்தில் எனபது எனக்குத் தெரியாது.

ராமன்: ஐயா, தெரியாவிட்டால் விட்டுவிடவேண்டியது தானே முறை; வாருங்கள் போசனத்திற்கு (எனவும் ராசசேகரன் எழுந்து போசனஞ்செய்யப் போகின்றான்.) உண்ணும்போதும் ஒரு கவளம் உணவை உண்பதும் பின் சில நிமிஷம் யோசிப்பதுமாக இருக்கிறான்; இதற்கிடையில் ராமன் "ஐயா இன்றைக்குச் சாம்பார் நல்லாயிருக்குமென்று அந்தப் பார்ப்பாத்தி அம்மாள் சொன்னாள்; எப்படியிருக்கிறதையா?

இராச: நல்ல ருசியான பெண், ராமன்.

ராமன்: (பெருஞ் சிரிப்புடன்) ஐயா, இது என்ன விபரீதமாயிருக்கிறதே; "இன்ன பொருளென்றறியேன், இன்னரசமென்றறியேன், கண்ணிமேல வைத்த கவனத்தால்" என்ற நிலைமையில் இருக்கிறீர்களே! இன்னும் "கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும் பசிவந்திடப் பறந்துபோம்" என்பார்கள். ஆனால் உங்கள் விஷயத்தில் அந்தப் பாட்டும் பிழைபட்டுவிட்டது; எங்கள் நாணக்கேணருக்குப் புறப்படுவது நல்லது; இது கிணறுவெட்டப் பூதம் புறப்பட்டவாறாய் வந்திருக்கிறது. பெரிய ஐயா அம்மா அறிந்தாற் பெரும் பிழை; உங்களை மாத்திரமல்ல அவர்கள் என்னையும் ஏசுவார்கள். இந்தப் பட்டினம் பொல்லாத பட்டினம், சாவதானமாக நடந்துகொள்ளவேண்டும் என்று பெரிய ஐயா நான் புறப்படும்போதே எனக்குச் சொன்னவர்.

இராச: ராமன், 'என்ன விடக்கதை பேசுகிறாய்; நான் ஒருபோதும் ஒரு தவறுஞ் செய்யமாட்டேன் வந்த கன்னிகையார்? ஏன் வந்தாள் என்ற இவைகளைப்பற்றிச் சிந்திக்கிறேனே யொழிய அதற்கு மேல் யாதும் யோசிக்கவில்லை; நீ என்னை வீதவியாசமாக நினையாதே', என்று சொல்லிப் போசனத்தை முடித்துக்கொண்டெழுந்து போனான். அதன் பின் ராமனும் பசியாறினான். சிறிது நேரஞ் செல்ல, கதவில யாரோ தட்டுஞ் சத்தம் கேட்டது; "அது ஆர்" என்று சொல்லிக்கொண்டு இராசசேகரன் தலைவாசற்புறம் வந்தான்.

—வரும்

## கையும் மெய்யுமாக அகப்பட்ட கள்வர்

### திடீரெனத் திருடர்மீது பாய்ந்த பொலிசார்

### கொழும்பு மேட்டுத்தெருவில் நடந்த சம்பவம்

கையில் ஆயுதம் ஏந்தியவர்களாக கன்னிரவில் ஒரு வீட்டைக் கன்னமிட்டுக் கொள்ளையிட முயற்சி செய்த மூவர் எவ்வாறு கைது செய்யப்பட்டனர் என்ற விபரம் இப்பொழுது வெளிப்படுகிறது. இச்சம்பவம் சில தினங்களுக்கு முன், கொழும்பு ஆட்டுப்பட்டித் தெருவைச் சேர்ந்த மேட்டுத் தெருவில் நடைபெற்றது.

கொள்ளைக்காரர்களின் சதியாலோசனையை ஏற்கெனவே அறிந்துகொண்ட கொட்டாஞ் சேனைப் பொலிசார் அன்றிரவு திரு. எச். பி. பெல்லிங் என்பவரது வீட்டிற் பதுங்கி இருந்து பாய்ந்தனர்.

#### முழுவிபரம்

இச்சம்பவத்தைப் பற்றிய முழு விபரமும் வருமாறு:—

நடுச்சாமத்திற்குப் பின் சில திருடர்கள் திரு. பெல்லிங் என்பவரது வீட்டிற் கொள்ளையடிக்க உத்தேசித்துக் கொண்டிருப்பதாகக்கொட்டாஞ்சேனைப் பொலிசாருக்கு ஒருவர் மூலம் தகவல் கிடைத்தது. அந்தப் பிரிவைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் உடனே ஸி. ஐ. டி. இன்ஸ்பெக்டருக்குத் தகவல் கொடுத்தார். ஸி ஐ. டி. இன்ஸ்பெக்டர் ஒருவர் திரு. பெல்லிங் வீட்டுக்கு அடுத்த வீட்டிற்றான் வசிக்கிறார். எனவே கொள்ளைக் கூட்டத்தாரைப்பிடிப்பதில் ஸி. ஐ. டி. இன்ஸ்பெக்டரும் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

#### 10 பொலீஸ் காரர்கள்

கொட்டாஞ் சேனைப் பொலீஸ் இன்ஸ்பெக்டருடன் சாதாரண ஆடைகளை அணிந்த 8 கொன்ஸ்டபிள்கள் இருந்தனர். இரவு 12 மணிக்குச் சிறிது முன்பாக, மேற்படி 10 பொலீஸ்காரரும் அந்த வீட்டைத் தூரத்திலிருந்து நன்கு கவனிக்கக் கூடிய மறைவிடங்களிற் பதுங்கிக் கொண்டனர்.

12 மணியும் அடித்தது. தெரு விளக்குகள் அணைக்கப் பட்டன. சிறிது நேரத்தில் திரு.பெல்லிங் வீட்டுக்கு முன்புள்ள ஒருமுடக்கிலிருந்து 4 பேர் வெளிப்படுவதையும் பின் அவர்கள் ரேட்டைக் குறுக்காகக் கடந்து குறித்த வீட்டுப் படிகளில் ஏறுவதையும் பொலிசார் அவதானித்துக் கொண்டிருந்தனர்.

#### மூன்றுபேர் கைது

வீட்டின் முன் அறைக்குச் செல்லக்கூடிய கதவு பூட்டப்பட்டிருந்தது. திருடர்கள் பூட்டை உடைத்துக் கொண்டிருக்கும் பொழுது தான் பொலிசார் திடீரென்று அவர்கள் மீது பாய்ந்தனர். ஒரு கள்வன் தப்பி ஓடிவிட்டான். மற்ற மூன்று பேரும் பொலிசாரிடம் சிக்கிக் கொண்டனர். கள்வர்கள் ஒவ்வொருவரிடமும் கத்திகள் இருந்ததாகவும் பூட்டைத் திறக்கக் கூடிய கருவிகளையும் அவர்கள் வைத்திருந்ததாகவும் தெரிகிறது.

அந்த வீட்டில் வசிப்பவர்கள் அன்றிரவு எந்தப் பக்கத்தில் நித்திரை செய்தார்களென்ற இரகசியம் இக்கள்வனுக்குத் தெரிந்தே இருக்கிறது. ஏனெனில், அன்றிரவு ஆட்கள் இல்லாததும் வீட்டுச் சொந்தக் காரரின் சகல நகைகளும் வைக்கப்பட்டிருந்ததுமான அறைக்குள் நுழைவதற்கே கள்வர்கள் முயற்சித்தனர்.

---

## அளவெட்டி சதானந்த வித்தியாசாலை

சென்ற (17-6-49) சனிக்கிழமை வலி-வடக்கு தமிழ்ஆசிரிய சங்கத்தால் நடாத்தப்பட்ட சங்கீதவிழாவில் அளவெட்டி சதானந்த வித்தியாசாலை 2ம் பரிசுக்குரியதாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றது.

# யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

## இல்லப்பிரிவு விளையாட்டுப் போட்டியும் பரிசளிப்பும்

இந்துக்கல்லூரியின் மாணவர் பிரிவுகளாகிய இல்லங்களுக்கிடையே நடைபெற்ற விளையாட்டுப்போட்டி சென்ற சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்றது. பெருந்திரளான ஆடவரும் மகளிரும் சமுகமளித்திருந்தனர். பழைய மாணவர்களிற் பலரும் சமுகமளித்திருந்தனர். அட்டவணையிற் குறிப்பிடப்பட்டபடி கிரமமாக விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. நாகலிங்கம் இல்லம், பசுபதி இல்லம், சபாபதி இல்லம் என்னும் மூன்று இல்லங்களுக்குமிடையே பெரும்போட்டி ஏற்பட்டிருந்தது.

போட்டி விளையாட்டுக்களின்பின், வடமாகாணத் தலைவர் மிஸ்டர். R. B. நாஷ் பரிசுகளை வழங்கினர். அவர் கல்லூரியின் முன்னேற்றத்தைப் பெரிதும் பாராட்டிப் பேசினர். ஈற்றில் அத்வக்காத் திரு. V. சுப்பிரமணியமவர்கள் நன்றி கூறக் கூட்டம் இனிது நிறைவேறியது.

### போட்டியில் வெற்றி பெற்றோரின் விபரங்கள்

நீளப்பாய்ச்சல் — இல்லம்

சிறுவர்கள்
1 ஏகாம்பரம் P — சபாபதி
2 மகேந்திரன் R — செல்லத்துரை
3 இராஜசுந்தரம் S — நாகலிங்கம்

நடுத்தர மாணவர்கள்
1 இராமலிங்கம் A — நாகலிங்கம்
2 சண்முகராஜா K — பசுபதி
3 செல்வநாயகம் M — பசுபதி

பெரிய மாணவர்கள்
1 யோகரத்தினம் C — காசிப்பிள்ளை
2 செல்வரத்தினம் M — நாகலிங்கம்
3 சேனாதிராஜா T — காசிப்பிள்ளை

வயதின் மிகுந்த மாணவர்கள்
1 இரத்தினசிங்கம் A — சபாபதி
2 கயிலாயபிள்ளை A — செல்லத்துரை
3 பஞ்சரத்னம் C — சபாபதி

உயரப் பாய்தல்

சிறுவர்கள்
1 ஆனந்தராஜா K — பசுபதி
2 மகேந்திரன் R — செல்லத்துரை
3 குமாரசாமி S — காசிப்பிள்ளை
இராஜசுந்தரம் P — நாகலிங்கம்

நடுத்தரமாணவர்கள்
1 சண்முகராஜா K — பசுபதி
2 இராமலிங்கம் A — நாகலிங்கம்
3 துரைரத்தினம் C K — நாகலிங்கம்

பெரியமாணவர்கள்
1 யோகரத்தினம் C — காசிப்பிள்ளை
2 பாலசுப்பிரமணியம் A — நாகலிங்கம்
3 இலங்கைராஜா K — பசுபதி

கோல்கொண்டு பாய்தல்

நடுத்தரமாணவர்கள்
1 சண்முகராசா K — பசுபதி
2 துரைரத்தினம் C K — நாகலிங்கம்

பெரிய மாணவர்கள்
1 இராஜரத்தினம் C K — சபாபதி
2 சொக்கலிங்கம் V — பசுபதி
3 மகேசன் S — நாகலிங்கம்

குண்டெறிதல்

பெரிய மாணவர்கள்
1 கதிர்காமத்தம்பி C — நாகலிங்கம்
2 சிவசிதம்பரம் T — பசுபதி

வயதின்மிகுந்த மாணவர்கள்
1 பஞ்சாக்ஷரம் C — சபாபதி
2 இரத்தினசிங்கம் A — சபாபதி
3 நாகரத்தினம் M — நாகலிங்கம்

440 யார் ஓட்டம்

நடுத்தர மாணவர்கள்
1 பரமேஸ்வரன் C — பசுபதி
2 பாக்கியராஜா T — பசுபதி
3 நாகராஜா P — செல்லத்துரை

பெரிய மாணவர்கள்
1 சிவரத்தினம் S — நாகலிங்கம்
2 செல்லத்துரை M — நாகலிங்கம்
3 இலங்கைராஜா K — பசுபதி

அரைமைல் ஓட்டம்

பெரிய மாணவர்கள்
1 சிவரத்தினம் S — நாகலிங்கம்
2 நடராஜா S — செல்லத்துரை
3 கதிர்காமத்தம்பி C — நாகலிங்கம்

வயதின் மிகுந்த மாணவர்கள்
1 கயிலாசபிள்ளை A — செல்லத்துரை
2 பாலசிங்கம் K — நாகலிங்கம்
3 தர்மசிங்கம் T — செல்லத்துரை

நண்டோடுவது போன்ற ஓட்டம்

பாலர்கள்
1 மன்னவராயன் R — பசுபதி
2 ஜயவீரசிங்கம் A — சபாபதி
3 மகாதேவன் C — நாகலிங்கம்

மூன்றுகால் ஓட்டம்

பாலர்கள்
1 ஜயவீரசிங்கம் A — சபாபதி
தனபாலசிங்கம் T — ,,
2 இராமநாதன் A — பசுபதி
மன்னவராயன் R — ,,
3 மகாதேவன் C — நாகலிங்கம்
தியாகராசா T — ,,

80 யார் ஓட்டம்

பாலர்கள்
1 ஜயவீரசிங்கம் A — சபாபதி
2 இராமநாதன் A — பசுபதி
3 மன்னவராயன் R — பசுபதி

100 யார் ஓட்டம்

சிறுவர்கள்
1 மகேந்திரன் R — செல்லத்துரை
2 ஏகாம்பரம் P — சபாபதி
3 குகதாஸ் S — நாகலிங்கம்
இராசசுந்தரம் P — ,,

நடுத்தரமாணவர்கள்
1 இராமலிங்கம் A — நாகலிங்கம்
2 சபாநாயகம் M — பசுபதி
3 பரமேஸ்வரன் C — பசுபதி

100 யார் ஓட்டம்

பெரியமாணவர்கள்
1 யோகரத்தினம் C — காசிப்பிள்ளை
2 செல்வரத்தினம் M — நாகலிங்கம்
3 இலங்கைராஜா K — பசுபதி

100 யார்த் தட்டிப் பாய்ச்சல்

பெரிய மாணவர்கள்
1 பாலசுப்பிரமணியம் A — நாகலிங்கம்
2 இராஜரத்தினம் C K — சபாபதி
3 சபாரத்தினம் S — சபாபதி

நடுத்தர மாணவர்கள்
1 குலஞானம் T — பசுபதி
2 பாக்கியராஜா T — பசுபதி
3 துரைரத்தினம் C K — நாகலிங்கம்

220 யார் ஓட்டம்

சிறுவர்கள்
1 மகேந்திரன் R — செல்லத்துரை
2 ஏகாம்பரம் P — சபாபதி
3 பாலசந்திரன் K — பசுபதி
நடராஜா S — பசுபதி

நடுத்தர மாணவர்கள்
1 இராமலிங்கம் A — நாகலிங்கம்
2 குலஞானம் T — பசுபதி
3 சபாநாயகம் M — பசுபதி

பெரியமாணவர்கள்
1 யோகரத்தினம் C — காசிப்பிள்ளை
2 செல்லரத்தினம் N — நாகலிங்கம்
3 இலங்கைராஜா K — பசுபதி

வயதின் மிகுந்த மாணவர்கள்
1 இரத்தினசிங்கம் A — சபாபதி
2 பஞ்சரத்தினம் C — சபாபதி
3 கயிலாசபிள்ளை A — செல்லத்துரை

180 யார் கீழ்த்தட்டிப்பாய்ச்சல்

பெரிய மாணவர்கள்
1 சிவரத்தினம் V — நாகலிங்கம்
2 இராசரத்தினம் C K — சபாபதி
3 பாலசுப்பிரமணியம் A — நாகலிங்கம்

1 மைல் ஓட்டம்

பெரிய மாணவர்கள்
1 சிவரத்தினம் V — நாகலிங்கம்
2 நடராஜா S — செல்லத்துரை
3 கதிர்காமத்தம்பி C — நாகலிங்கம்

பந்து ஓட்டம்

சிறுவர்கள் 4 × 110
1 பசுபதி
2 நாகலிங்கம்
3 காசிப்பிள்ளை

பெரியமாணவர்கள் 4 × 440
1 நாகலிங்கம்
2 பசுபதி
3 சபாபதி

நடுத்தரமாணவர்கள் 4 × 220
1 பசுபதி
2 சபாபதி

## ஆஸ்பத்திரியிற் கிழவர் மரணம்

### ஏணியின் கைபிடிக் கம்பியிற் பிரேதம்

யாழ்ப்பாணம் ஜுன் 16

யாழ்ப்பாணம் சிவில் ஆஸ்பத்திரியில் இன்று பிற்பகலில் 65 வயதான ஒருவயோதிகனின் மரணம்பற்றி விசாரணை நடைபெற்றது. குறித்த வயோதிகனின்பிரேதம் ஆஸ்பத்திரியிலுள்ள ஆண்கள் சத்திர சிகிச்சை வார்டிலுள்ள ஏணி இரும்புக் கைபிடிக் கம்பியில் தூங்கிக் கொண்டிருந்தமை இரவிற் கண்டு பிடிக்கப்பட்டது.

மரண விசாரணையில் சின்னட்டி வேள்ளையன் 5 ம் தேதி காலை 9-45 மணிக்கு ஆஸ்பத்திரியிற் சேர்க்கப்பட்டதாகவும் அவனுடையமார்பின் பக்கத்தில் நோவிருப்பதாகக் கூறியதாகவும் டாக்டர் எஸ். ஏ. பார்ட்லர் கூறினர். பின்னும் இவர் சாட்சியங் கூறியதும் மார்படைப்பின் காரணமாக நோயாளி மரணமடைந்ததாக மரண விசாரணை அதிகாரி தீர்ப்புக் கூறினர்.

யாழ்ப்பாணம் சிவில் ஆஸ்பத்திரிக்கு இரவில் வேலை செய்யும் வேலையாளர்கள் போதுமானவர்களல்லரென மரண விசாரணை அதிகாரி குறிப்பிட்டார்.

---

பெரிய மாணவர்கள் 4 × 110
1 நாகலிங்கம்
2 சபாபதி
3 பசுபதி

கயிறிழுக்கும் போட்டி

செல்லத்துரை

பழைய மாணவர்கள் ஓட்டம்
1 திரு C சுவசுப்பிரமணியம்
2 திரு. S U சோமசேகரம்

சமையற்காரர் வேலையாளர் ஓட்டம்
1 இளையதம்பி
2 முருகேசு
3 பெருமாள்

வந்திருந்தவர் உத்தியோகஸ்தர் போட்டி
1 திரு. S. P. இராசையா ஸ்ரீமதி K V மயில்வாகனம்
2 திரு. M சின்னத்தம்பி செல்வி தன்னலட்சுமி

இல்லங்களின் தகுதிப் பிரிவு
1 நாகலிங்கம் 99½ அம்சங்கள்
2 பசுபதி 88 ,,
3 சபாபதி 71 ,,
4 செல்லத்துரை 38 ,,
5 காசிப்பிள்ளை 24½

தனிப்பட்டவர்களின் வெற்றி

பெரிய மாணவர்கள்
1 சிவரத்தினம் V — நாகலிங்கம்
2 யோகரத்தினம் C — காசிப்பிள்ளை

நடுத்தரமாணவர்கள்
இராமலிங்கம் A — நாகலிங்கம்

சிறுவர்கள்
மகேந்திரன் R — செல்லத்துரை

வயதின் மிகுந்த மாணவர்கள்
இரத்தினசிங்கம் A — சபாபதி

பெரியமாணவர் வெற்றிச்கிண்ணப் பரிசு
1 சிவரத்தினம் V — நாகலிங்கம்
2 யோகரத்தினம் C — காசிப்பிள்ளை

நடுத்தரமாணவர் வெற்றிக்கிண்ணப் பரிசு
1 இராமலிங்கம் A — நாகலிங்கம்
2 மகேந்திரன் R — செல்லத்துரை

பந்து ஓட்ட வெற்றிக்கிண்ணப்பரிசு — பசுபதி

கயிறிழுத்தல் வெற்றிக்கிண்ணப்பரிசு — செல்லத்துரை

இல்ல வெற்றிக்கிண்ணப்பரிசு — நாகலிங்கம் இல்லம்

பரிசுக் கிண்ணங்களை உபகரித்தோர்

திரு. C குமாரசுவாமி அவர்கள் டிஸ்ற்றிக் நீதிபதி
டக்டர் K கனகரத்தினம்
திரு. சிவசுப்பிரமணியமவர்கள் அத்வக்காத்
இந்துசாதனக்காரியாலயத்தார்
இந்துக் கல்லூரித் தமிழ்ப்பாடசாலையார்
பயனியர்க் கம்பெனியார்
ஸ்ரீமதி சிதம்பரநாதச் செட்டியார்
திரு. R. C. மன்னவராயன் அவர்கள்

## சைவசமய வளர்ச்சிக்காக எடுக்க வேண்டிய முயற்சி

—0—

க. சுப்பிரமணியம் பண்டித புலோலி தெற்கு பருத்தித்துறை

சைவசமயம் கலைசிறந்து விளங்கியகாலம் மலையேறிவிட்டது. இப்போது சகலம் கலியும். காண்டைத்தனமே தாண்டவம் ஆடுகிறது. அந்த இலங்கா தேவியும் சைவத்தாயும் ஈன்றெடுத்த அருமைச் செல்வனும் ஆறுமுக நாவலர் தான் தமிழின் பெருமைக்கும் சைவத்தின மகிமைக்கும் காரணம். அவர் தேகவியோகமானதும் பழையபடி நமது சமயம் தூங்குகிறது. இதைத் தட்டி எழுப்ப ஒருவரும் இல்லையா? சிறும் சிறப்பும் பெற்று விளங்கிய நாது சமயம் இப்போது அடைந்திருக்கும் நிலைமைதான் என்னே! சைவத்தை முன்னிலைக்குக் கொண்டு வருவதற்காகச் சைவவித்தியா விருத்திச்சங்கமும் சைவபரிபாலனசபையும் இன்னும் பல சைவமகாசபைகளும் தொண்டாற்றி வருவது யாவரும் போற்றற்பாலதே. அன்னவர்கட்கு நாங்கள் உதவி செய்து ஊக்கப்படுத்த வேண்டாமா. பேச்சு உதவியோடு நில்லாமல் பொருள் உதவியுஞ் செய்யவேண்டும். வீடி சிக்கிரம் முதலியவைகளில் செலவிடும் காசில் ஒரு இந்துசாதனத்தைக் கொடுத்துநமது இந்துசாதனத்தை ஆதரிக்கக்கூடாதா? சிந்தை.

சைவப்பெருமக்களாகிய நாம் நமது சமய வளர்ச்சியைக் கருதிச் செய்ய வேண்டிய வேலைகள் பலவுள. பனையால் விழுந்தவன் மேல் மாடு ஏறி மிதிப்பதுபோல் நமது சமயம்கேவலநிலைமையை அடைந்தும் இன்னுமா நாம் அதற்குக் கேவலம் தேடிக்கொள்ள வேண்டும். கோவில்களில் திருவிழாக்காலம் வந்து விட்டது. அகிலாண்ட கோடிப் பிரமாண்ட நாயகனாகிய சச்சிதானந்தப் பெருமானின் ஸ்தலம் இப்போது ஆலய வழிபாட்டிற்குப் பதிலாக நாடகமேடைகளாகிவிட்டன. தேவ+அடியாள் என்னும் பதம் இப்போது சின்னமேளம் என்னும் பேர்பெற்றிருக்கிறது. தேவடியாளை கடாயமாகக் கேவிலுக்குப் போகவேண்டுமா? மாமிசமுடிவகை முதலியவைகளை அருந்திவிட்டுக் கால ஆட்டுவதும் கையை வீசுவதும் கண்ணை அடிப்பதுமா கடவுள் விரும்புகிறார்? அப்படியுங் கேட்கிறாரா? சாண்டைகளின் கண்ணுக்கு விருந்தளிப்பதா திருவிழாவின் நோக்கம்? இச்செய்கை சமய ஆசாரத்துக்கு ஒவ்வாதது? பாடுபட்டுத் தேடிவைத்த பணத்தையெல்லாம் ஒரு நிமிஷத்திற்குள் அநியாயமாகச் செலவிடுகிறார்களே. ஆயிரம் ரூபாய் அந்தத் தாஸிவேசைகளுக்குப் போகிறது அதனால் நாம் அடையும் பலன் என்ன சினவெடி சுடுவதினால், துர் நாற்றத்தைக் பெறுகிறோமேயன்றி நல்ல மணத்தைப் பெறவில்லை. அதுபோலவே இசைநகமீறு ய்ப்போகிறது. இப்படிச் செலவிடப்படும் காசைக் கோயிலைத் திருத்துவதிலும் சமயசம்பந்தமான புஸ்தகங்கள் ,உசசிடுவதிலும் கதாப்பிரசங்கஞ்செய்விப்பதிலும் செலவிடலாமே இதைவிடுத்து அநாகரீக முறைகளைத் தழுவுவது ஒருபோதுயக்கமாகாது. வாணவேடிக்கை செய்வதினால் நாம் அடையும் பலன் என்ன? இதற்குப்பதிலாக நல்ல தாளில் பெரிய எழுத்தில எளிய நடையில் அழகிய சித்திரப்படங்கள் வெளியிடலாமே. நாயன்மார்களினதும் கடவுள்களினதும் படங்களை இக்கது ஆற அழகிய சித்திரப்படங்களாக அச்சிட்டு சிறியதேர் விலைக்குவிற்கலாம். திருத்தொண்டர்கள் தெய்வத்தன்மைவாய்ந்த திருவிழாவிலைப் பூசி உருத்திராக்கமாலைபூண்டு கம்பீரமாகவாழ்ந்த ஞானலோக தமிழினைப்பற்றியும் சைவத்தின் மகிமையைப் பற்றியும் மக்கள் மனத்தைக் கவரத்தக்கதாக பிரசங்கங்கள் செய்வித்தல்வேண்டியது. மக்கள் அனைவரையும் மாமிச உணவைவிட்டு மரக்கறியுணவையே அருந்தும்படி செய்தல்வேண்டும்.

கட்குடியை அறவே நீக்க முயற்சி எடுக்க வேண்டும்.

எக்காரணம் கொண்டும் எவரும் சிறுதெய்வங்கட்கு உயிர்ப்பலி இடலாகாது. சிறுபள்ளிக்கூடங்களுக்குச் சென்று மாணவர்கட்கு பிட்டாய் வாழைப்பழம் கொடுத்து மாமிசஉணவை நீக்கும்படி சொல்லவேண்டும். சிறுபிள்ளைகளே வருங்காலத்து மக்கள். ஆதலால் அவர்கட்கு சிவநறுமணத்தைப் பரப்புதல் வேண்டும்.

நமது ஆசிரியர்கள் சைவப்பள்ளிக்கூடங்களில் சமய போதனை செய்தல் வேண்டும். நாம் நமது பிள்ளைகளைச் சைவப்பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பவேண்டும். நமது சைவப்பயிர் சமயபோதனை என்னும் மழையைக்காணுமல் வாடி வதங்கி நிற்கிறது. மேலும் நால்வகைக்களைகள் அதனைவளரவிடாது தடைப்படுத்துகின்றன. ஒருபக்கம் நாஸ்திகளின் நடனம் அதனை விழுங்கிக்கொண்டு வருகிறது. மற்றப்பக்கம் கிறிஸ்தவமதம் அதனைச் சூழ்ந்து பெரும் காடாகி வளர்கிறது. மறுபுறம் "எம்மதமும் சம்மதம்" என்னும் புதுக்கொள்கை அதனை அற்றுப்போகச்செய்கிறது திருமடம் எல்லாம் வெறும்மடமாகி வருகின்றன. சைவம் என்னும் மரம் கருகுகிறது. எழுமின! விழுமின! சைவப்பயிரைபரிபாலியுங்கள் சிவநறுமணம் கமகம என்று வீசட்டும். எங்கெங்கும் சிவமுழக்கம் செய்யுங்கள்.

## 1938-ம் ஆண்டின் மிகத்திறமையான சுகாதாரக் காட்சி

நெல்டெனியாவுக்கு வழங்கப்பட்ட மைர்கல் குணரத்தின

### போட்டிப் பரிசுக் கேடயம்

அரசாங்க வைத்திய சுகாதாரப் பகுதி வெளியீடு

1930-ம் ஆண்டு தவங்கி கழுத்துறை திரு. எம். எல். பி. குணரத்தின அவர்களால் ஆண்டுதோறும் போட்டியில வென்றவருக்கு வழங்கப்பட்டு வருங்கேடயம் 1938-ம்ஆண்டு ஜூலையாதம் நெல்டெனியாவில் நடைபெற்ற சுகாதாரக்காட்சியை ஒழுங்குசெய்தவர்களுக்கு வழங்கப்பட்டது.

இக்காட்சி அப்பகுதிச் சுகாதார டாக்குத்தோர்மாரையும் மலேரியாச் சுகாதார டாக்குத்தோர்மாரையும் ஒரு சிறு சபையாரால் நடத்தப்பெற்ற பற்று, உடநம்பரை, கிருஷிக, கல்வி, கைத்தொழில், சுகாதாரக்காட்சியின்ஒரு அம்சமாய் நடத்தப்பட்டது.

இப்போட்டியின் சட்ட திட்டங்களின்படி நடவடிக்கைகளில் இடுபடுதற்கு அவ்விடத்திலுள்ளவர்களைக் கொண்ட ஒரு சிறுசபையை நிறுவவேண்டியது அவசியம். எல்லா உதவியும் ஊரிலுள்ள சுகாதார டாக்குத்தோர் அல்லது மலேரியாச்சுகாதார டாக்குத்தோர்மூலம்இப்பகுதியாரால் செய்யப்படும். மத்தியஸ்தம் செய்யும் போதுதாமாகப் புதுவழிகளில் எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகளையும் பொதுசனங்களுக்கு ஊக்கத்தை அளிக்கும் முறையிற் பிரத்தியேகமான வழிகளைக் கையாடுவதையும் கவனிக்கப்படும்.

காட்சிகளின் திறமையை வைத்திய சுகாதாரப் பகுதிப் பிரதமத்தலைவரையும், ஊர்ப்பரிபாலன சபைகளின்பிரதமத்தலைவரையும், இலங்கை சமூக சேவாசங்கத்தின் சபாநாயகரையுங் கொண்ட ஒரு சிறு சபையாரால் மதிப்பிடப்படும். போட்டியின் திறமையை அதைப்பற்றி அனுப்பப்படும் அறிக்கைகளிலிருந்தும் மேற்படி சபையின பிரதிநிதிகளாகிய வைத்திய சுகாதாரப்பகுதி உத்தியோகஸ்தரின் அறிக்கையிலிருந்துமேமதிப்பிடுவார்கள்.

இவ்வறிக்கைகளில் நடந்தேறிய விஷயங்களின் முழுவிபரங்களும் அவ்வப்பகுதியில் பொதுசனங்களின் அறிவும் தாய்மாரினதும் குழந்தைகளினதும் சுகாதாரத்தைப் பாதிக்கும் கஷ்டங்களையும் பிரச்னைகளையுங் கூற வேண்டும். அப்பேர்ப்பட்ட விபரங்களுடன் புகைப்படங்களும் அப்பிரயத்தனங்களிற் கையாண்ட பிரசுரங்களினதும் பிரசாரத்திற்காக உபயோகிக்கப்பட்ட வேறு சாதனங்களினதும் பிரதிகளைக் காட்டவேண்டும்.

ஆண்டுதோறும் நடைபெறும் இப்போட்டி மூன்று நகர பரிபாலன சபைகளையும் விட மற்றும் ஊர்ப்பரிபாலன சபைகளும் நகர பரிபாலன சபைகளின் வட்டாரத்திற்கு வெளியிலுள்ள சமூக சேவை ஸ்தாபனங்களும் கலந்து கொள்ளலாம்.

## குருபூசை

வேதநெறி தழைத்தோங்க மிகு
சைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய்
மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம
பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்
தொண்டு பரவுவாம்.

நிகழும் பிரமாதி ஆண்டு வைகாசித் திங்கள் 20-ம் நாளாகிய (3-6-39) வைகாசி மூலத்தன்று பிர்பகல் 6½ மணி ஆலயில்உயர் திருஞானமண்டபத்தில் அதி விமரிசையாகக் கொண்டாடப்பெற்றது. அவ்வமயம் அன்பர்கள் பலர் சமுகமாய் இருந்தனர்.

விக்னேஸ்வரர், நடேசப்பெருமான், அப்பிரமவிரியர், கல்யாணி இவர்களின் திருஉருவப்படங்கள் மேடைமேல் எழுந்தருளப் பெற்று ஆரங்களால் அழகுபெற அலங்கரிக்கப்பட்டன. தாம்பூலம், பழவர்க்கம், பலகாரவகை ஆகியன நிவேதிக்கப்பட்டுதூப தீப ஆராதனைகள் செழுத்தப்பட்டன. பிரம்மஸ்ரீ தி. சதாசிவஐயர் அவர்கள் ஆராதனைப் போது சமுகமாயிருந்த அன்பர்களையுஞ் சேர்த்துக் கன்னெஞ் சமுங்கரையக் கூடியவிதமாக அநேக அருட்பாக்களை வெகுசிறப்பாக ஓதிச் சயபந்த சுவாமிகளின் தனிப்பெருஞ் ஞான இன்ப வாரிதியில் திளைத்தனர்.

ஆராதனை முடிந்ததும் ஐயர் அவர்கள் சுவாமிகளின் திவ்விய சரித்திரத்தைச் சிறப்பாகச் சுருக்கி விளக்கி உரைத்தனர். சொற்மொழியில் "நால்வர் சென்றவழியே செல" நாட்டு மொழியின் திவ்விய பொருளையும், பார்வதிதேவியார் பொற்கிண்ணத்தில் திருமுலைப்பாலைக் கறந்து சிவஞானத்தைக் கலந்தூட்ட, சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம், பவமதனை அறமாற்றும் பாங்கினில ஓங்கிய ஞானம், உவமையிலாக் கலைஞானம், உணர்வரிய மெய்ஞ்ஞானம் எனப்பட்டஞானம் முழுமையும் கைவரப் பெற்றமையும், திருக்கோலக்காவில் பஞ்சாக்கரம் வரையப்பெற்ற பொற்றாளங்கள் பெற்றதையும், முத்துச்சிவிகை, குடைசின்னங்கள் கிடைத்ததையும், திருப்பாச்சிலாச் சிராமத்திலுள்ள கொல்லி மழவன் என்ற அரசனின் கையின் முயலகன் என்னும் நோயைத் தீர்த்ததையும், திருப்பட்டீச்சரத்தில் முத்துப்பந்தர் பெற்றதையும், கல்லைவளி நீங்கப் பசும்பொன் ஆயிரம் கிழி பெற்றதையும், யாழ்முரிப்பதிகம் பாடியதையும், சடையாயெனுமால் என்னும் பதிகம் பாடி வணிகன் விஷத்தை இறக்கி அவனை உயிர்ப்பித்ததையும், திருவீழிமிழலையில் வாசிதீரவே காசுபெற்றதையும், திருமறைக் காட்டில் மறைக்கதவு மூடப்பாடியதையும், திருமடத்திலிட்டதீ வெப்பு நோயாக மாறியதையும், காதர்தம்மருள் முன்பெற்றாடிய மகிழ்ச்சி பொங்க போதனார் பணிந்து போற்றி விடைகொண்டு சென்று பாண்டியனின் வெப்பு நோய் நீக்கி, பாண்டிமாதேவிக்குத் தேறுதல் கூறி, போகமார்த்த பூண்முலையாள் என்னும் திருநள்ளாற்றுப் பதிகம் பொறித்த ஏட்டை நெருப்பிலிட்டும் வேகாது பசுமையாய் இருக்கும்படி செய்து, வாழ்க அந்தணர் என்னும் பதிகம் எழுதியஏடு மருவுடன் பிறவி ஆற்றில் மாதர் மனஞ்சென்றாற்போல எதிர்த்து நீர் கிழித்துச் சென்றதையும், சமணர்கழுவேற்றப் பட்டதையும், "வேந்தனும்ஓங்குக" என்ற கூன்பாண்டியனின் கூன் நிமிர்ந்ததையும் ஆண்பனைகளைப் பெண்பனைகளாக்கியதையும், கோற்றொடிச் செங்கை தோற்றிடக் குடமுடைந்து அங்கம் பூம்பாவை தோன்றச் செய்ததையும், வேதநெறியை நிலைநாட்டுவான் வேண்டிக் கன்னிகை யொருத்தியைக் கடிமணம் புரிந்து சோதிபுகலத்த விருத்தாந்தத்தையும் செம்பாகமாக உரைக்க 8½ மணியளவில் கூட்டம் நிறைவெய்தியது.

காதலியைக்கைபற்றி கட்டுகொண்டு வலங்
கொண்டருளத்
தீதகற்ற வந்தருளும் திருஞான சம்
பந்தர்
நாதனெழில் வளர் சோதி நண்ணியத
னுட்புகுவார்
போதநிலை முடிந்தவழிப் புக்கொன்றி
யுடனுனர்


# தி நாஷனல் மியூச்சுவல் லைவ்

அசோஸியேஷன் ஒவ் ஆஸ்ட்ரலேஷியா லிமிடெட்

"மிகப்பெரிய முன்னேற்றமுள்ள
பிரிட்டிஷ் லைவ் காரியாலயம்"

சுத்தமான மியூச்சுவலே யன்றிப் பங்காளரில்லாதது

மிக அதிகமான நன்கொடைப்பணம்
சாதாரணமான விகிதங்கள்
தாராளமான நிபந்தனைகள்

இலங்கைக் கிளை:

கோர்னர் சதாம் & குவீன்ஸ் ஸ்ட்ரீட்ஸ். கொழும்பு.

யாழ்ப்பாணப் பிரதிநிதி
எம். வல்லிபுரம்
மானிப்பாய.

ஆர். எம். வெஸ்ட
ஸிலோன் மானேஜர்.

Y. 1-4-39—30-9-39 (ன்)



## சாலாமிஸ்திரி லேகியம்

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். அநேகல் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரீ, தக்குமப்பூ, சலாஜித், கஸ்தூரி, குமான்தாகா, பிதாறு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸலி, பிஸ்தாஸ், சாரப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, சீமுள்ளிவிதை, நாகப்பு, லக்கபஸ்பம், அகிர்ஸ்பர், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம், சாம்பிராணி பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிவகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனால் சீரழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, இருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்தலேகியத்தைச் சாப்பிட்டுவந்தால் மேற்சொல்லியவியாதிகள் குணமடைவதுடன் சூதகவாயு பிரசவமுறையில் உண்டாகும் நோய்கள்தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும்பெறுவார்கள். பால்விருத்தியாகும்

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா 20. அரை ருத்தலுக்கு ரூபா 10. கால்ருத்தலுக்கு ரூபா 5 தபாற்செலவுபிரத்தியேகம்

சிங்கப்பூர் பினங்கு முதலிய தேசங்களுக்கு இராச்சியப் பதிந்த வீ. பீ. சட்டம் இல்லாததனால் முன் மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,

க. ஆறுமுகம்பிள்ளை

ஸ்ரீ சிவஞான ஆரோக்கிய வைத்தியசாலை.

வீட்டிலக்கம் 33, பழையவாடி றோட்டு, கோட்டைமுனை, மட்டக்களப்பு, சிலோன்


# ஆகாயவசனி அறிக்கைகள்

### மதராஸ் 1

வி யு எம் 211 மீட்டர்கள் (வி/1420 கி சை)

ஜூன் 23 வெள்ளி

மாலை

5 00 கர்நாடக வாத்தியக்கோஷ்டி தோடி
5 15 ஸ்ரீ என் ராஜகோபாலன் வாய்ப்பாட்டு
6 00 ஸ்ரீ சுப்ரமண்ய ஐயர் புல்லாங்குழல்
6 45 ஸ்ரீ என் ராஜகோபாலன் வாய்ப்பாட்டு
7 00 கர்நாடக வாத்தியக் கோஷ்டி ராகமாலிகை
7 15 எனிஇல் விளங்கும் பொருளாதாரம் 3 சமுக பொருக்கடன் பாக்கி ஸ்ரீ வி. டி. ராஜேஸ்வரன் தமிழ்ப் பேச்சு
7 30 ஸ்ரீ வெங்கடேஸ்வரசர்மா வாய்ப்பாட்டு
8 15 அ இ ரே வித்வான் கோட்டுவாத்தியம்
8 25 ஸ்ரீ வெங்கடேஸ்வரசர்மா வாய்ப்பாட்டு
8 55 "அதற்குமேல் அறியாதவர்கள்" ரெவரெண்ட் வி ஒ. கார்ரன் ஆங்கிலம்
9 10 உள்ளூர்வர்த்தமானமும் வானிலை விபரமும்
9 15 வர்த்தமானமும் வானிலை விபரமும்
9 30 சிறீ எஸ். இந்திரகோபால்செட்டி பிடில்
10 30 முடிவு

### மதராஸ் 2

60. 98 மீட்டர்கள் (வி/4920 கி சை)

மாலை

5 00—6 00 மதராஸ் 1ல் இருக்கிறபடி
6 00 ஸ்ரீமத் ஆந்திர மகா பாரதத்திலிருந்து புராணக் காலக்ஷேபம் ஸ்ரீ பாதரி சுப்பராய சாஸ்திரி
6 20 நடப்புவிலை வாசியும் அறிவிப்புகளும்
6 25 தோட்டம் சம்பந்தமான சில பிரச்சனைகள்
6 35 ஸ்ரீமதி வெங்கடலக்ஷ்மம்மா வாய்ப்பாட்டு
6 45—10 30 மதராஸ் 1ல்இருக்கிறபடி
10 30 முடிவு

### திருச்சினுப்பள்ளி

வி யு தி 397 மீட்டர்கள் (வி/758 கி சை)

டிரான்ஸ்மிஷன் 1

பகல்

2 00—3 00 கிராமபோன் சங்கீதம்
2 00 தேவாரம் திருப்புகழ் ஸ்ரீ கம்.எம் தண்டபாணிதேசிகர் ஸ்ரீ சுந்தரமூர்த்தி ஓதுவார்
2 30 ஸ்ரீ கே. எஸ். நாராயணஐயங்கார் கோட்டுவாத்தியம்
2 45 மிஸ்டர் இ.எம். அப்துல்ரஹிமான் வாய்ப்பாட்டு மிஸ்டர் எஸ். பி. அப்துல் காதர்
3 00 முடிவு

டிரான்ஸ்மிஷன் 2

மாலை

6 00 கிராமவாசிகளுக்குரிய நிகழ்ச்சிகள் கல்ல பூமி "கரும்பு பயிரிடுதல்" நடப்புவிலை வாசிகளும் அறிவிப்புகளும்
6 30 இஞ்சிக்குடி இ.கே. பிச்சக்கண்ணு சகோதரர்கள் நாகசுரம்
7 00 "நான் பார்த்தன்ன நடனங்கள்" ஸ்ரீ ஜி. கே. சேஷகிரி தமிழ்ப் பேச்சு
7 15 ஸ்ரீமதி எம். எஸ். சுந்தரம் வாய்ப்பாட்டு
7 45 இஞ்சிக்குடி இ.கே.பிச்சக்கண்ணு சகோதரர்கள் நாகசுரம்
8 30 ஸ்ரீமதி ருக்மணி பாலாவும் ஸ்ரீ தாசப்பாவும் ஸ்ரீ கருணாகரனும் ஸ்ரீமதி சந்தானலக்ஷ்மியும
8 45 ஸ்ரீமதி எம். எஸ். சுந்தரம் வாய்ப்பாட்டு
9 15 வர்த்தமானமும் வானிலை அறிக்கையும்
9 30 முடிவு

### மதராஸ் 1

வி யு எம் 211 மீட்டர்கள் (வி/1420 கி சை)

ஜூன் 24 சனி

மாலை

5 00 கர்நாடக வாத்தியக் கோஷ்டி குலினி
5 10 ஸ்ரீ டி. ஸ்ரீனிவாசராவ் வாய்ப்பாட்டு
6 00 அ இ ரே வித்வான் கோட்டுவாத்தியம்
6 15 சிறீமதி எஸ். கே வேதவல்லி வாய்ப் பாட்டு
6 45 'மிட்டாய் கடை' தமிழில் ஒரு ஹாஸ்யநாடகம்
7 15 "கைவிருப்பு" சிறீ வி. சீதாராம சாஸ்திரி
7 30 சிறீ வி.ஜெருஷ்ணன் வாய்ப்பாட்டு
8 30 சிறீ எ. நாராயணய்யர் கோட்டு வாத்தியம்
8 55 வாழ்க்கைச் சித்திரம் 4 சிறீ என் டி. வரதாச்சாரி ஆங்கிலப்பேச்சு
9 10 உள்ளூர் வர்த்தமானமும் அறிவிப்புகளும்
9 15 வர்த்தமானமும் வானிலை விபரமும்
9 30 ஐரோப்பிய சங்கீதம்
10 30 முடிவு

### மதராஸ் 2

60. 98 மீட்டர்கள் (வி/4920 கி சை

மாலை

5 00—6 00 மதராஸ்1ல் இருக்கிறபடி
6 00 சிறீ கிருஷ்ண துலாபாரம் தெலுங்கு
6 35 நடப்புவிலை வாசியும் அறிவிப்புகளும்
6 45—9 30 மதராஸ் 1ல் இருக்கிறபடி
9 30 சிறீ வ. நாராயணய்யர் கோட்டு வாத்தியம்
10 30 முடிவு

### திருச்சினுப்பள்ளி

வி யு தி 397 மீட்டர்கள் (வி/758 கி சை

டிரான்ஸ்மிஷன் 1

பகல்

2 00—3 00 கிராமபோன் சங்கீதம்
2 00 சிறீ டி. பலராமனும் கோஷ்டியும் கிளாரியனெட் கொலம்பியா காவல்ம வாத்தியக்கோஷ்டி பல்லடம் சஞ்சீவிராவ் புல்லாங்குழல்
2 30 சிறீ டி. பி. ராமகிருஷ்ணன் வாய்ப்பாட்டு
3 00 முடிவு

டிரான்ஸ்மிஷன் 2

மாலை

6 00 கிராமவாசிகளுக்குரிய நிகழ்ச்சிகள் "ஆலமரத்தடியில்" நடப்பு விலை வாசிகளும் அறிவிப்புகளும்
6 30 சிறீ டி. டி. சங்கரஐயர் பிடில்
7 05 "செல்லாத ராணி ரூபாய்" திருச்சி ரேடியோநாடகக் கோஷ்டியார்
7 15 சிறீமதி சுப்பின்னை ரங்கராஜன் வாய்ப்பாட்டு
7 45 சிறீ டி. டி. சங்கர ஐயர் பிடில்
8 30 தக்கடாக்கன் மாஸ்டர் முருகேசனும் சிறீமதி கே. எல். வசந்தாவும் சொத்தமங்கலம் சிறீ சிறீனிவாசனும் சிறீமதி சங்கீதசங்கரியும
8 45 இங்கிலாந்து V S மேற்கிந்தியத் தீவுகள்
9 05 3 அ இ ரே வாத்தியக் காரர்கள்
9 15 வர்த்தமானமும் வானிலை அறிக்கையும்
9 30 முடிவு

### மதராஸ் 1

வியு எம் 211 மீட்டர்கள் (வி/1420 கி சை)

ஜூன் 25 ஞாயிறு

மாலை

5 00 சிறீ எஸ். விஸ்வநாதர் வாய்பாட்டு
5 30 சிறீமதி எம் கல்பகமும சிறீமதி எம். கமலாவும் வாய்ப்பாட்டு
6 30 கர்நாடக வாத்தியக் கோஷ்டி கமாஸ்
6 40 சிறீ எம். எஸ். செல்வப்பிள்ளை ஐயங்கார் வாய்ப்பாட்டு
7 30 'அசோகவனத்தில் சீதை' மலையாளநாடகம்
8 30 சிறீ எம். எஸ். செல்வப்பிள்ளை ஐயங்கார் வாய்ப்பாட்டு
8 55 ப்ரொபஸர் சிறீ வெங்கடேஸ்வரர் ஸ்வரகத்
9 10 உள்ளூர் வர்த்தமானமும் அறிவிப்புகளும்
9 15 வர்த்தமானமும்வானிலைவிபரமும்
9 30 கிராமபோன் சங்கீதம்
9 35 புதிய புஸ்தகங்கள் விமர்சனம் டாக்டர் எம். தாமோதரன்
9 50 ப்ரொபஸர் சிறீ வெங்கடேஸ்வரர் ஸ்வரகத்
10 30 முடிவு

### மதராஸ் 2

60. 98 மீட்டர்கள் (வி/4920 கி சை)

மாலை

5 00—9 50 மதராஸ் 1ல் இருக்கிறபடி
9 50 ஐரோப்பியசங்கீதம்
10 30 முடிவு

### திருச்சினுப்பள்ளி

வி யு தி 397 மீட்டர்கள் (வி/758 கி சை)

டிரான்ஸ்மிஷன் 1

பகல்

2 00—3 00 கிராமபோன் சங்கீதம்
2 00 வாத்தியக்கதம்பம் திருவீழிமிழலை சுப்ரமண்யம் சகோதரர்கள் நாகசுரம் சிறீ ஜி. சுட்மண்யதேவரா பிடில் சிறீமதி தனம்மாள் வீணை சிறீ என். நடராஜபிள்ளை புல்லாங்குழல் சிறீ டி. சிறீனிவாச ஐயங்கார் ஜலதரங்கம் கொலம்பியா வாத்தியக் கோஷ்டி கிளாரியனெட் சிறீ கே. என். நாராயண ஐயங்கார் கோட்டுவாத்தியம் பாபுராவ் தெல்லாங்கர் ஹார்மோனிய
3 00 முடிவு

## கண்டி மேயர்த் தேர்தல்

### ஸேர். குடாரத்வத்தை தேர்ந்தெடுக்கப்பட்டார்

கண்டி ஜூன் 17

சீர்திருத்தப்பட்ட கண்டிநகரசபையின் முதற் கூட்டம் நகரசபைக்கொம்மிஷனர் திரு. சாண்டிஸ் தலைமையில் இன்று காலை நடைபெற்றது. அப்பொழுது நடைபெற்ற மேயர்த் தேர்தலில் ஸேர். குடாரத்வத்தை ஆறு மேலதிகமான வாக்குக்களால் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

டிரான்ஸ்மிஷன் 2

மாலை

6 00 கிராமவாசிகளுக்குரிய நிகழ்ச்சிகள் ரேடியோ பஞ்சாயத்து நடப்பு விலை வாசியும் அறிக்கையும்
6 30 தமிழ் வேதங்கள் (சீகார்டுகள்)
6 45 எங்கள் தபால்பெட்டி
7 00 நிலத்தில், நீரில், நீலவானத்தில் ஸர். டி. விஜயராகவாச்சாரியாரைப் பேட்டிகண்டவிபரம் தமிழ்
7 15 சிறீ டி. சூர்யகுமாரி சிறீமதி எம். எஸ். ஞானமணி சிகார்டு
7 30 அஜாமிள உபாக்கியானம் பிரம்ம சிறீ டி. அண்ணுச்சாமி பாகவதர்
8 45 அ இ ரே வித்துவான் வீணைக்கச்சேரி
9 15 வர்த்தமானமும்வானிலைவிபரமும்
9 30 முடிவு

### மதராஸ் 1

வி யு எம் 211 மீட்டர்கள் (வி/1420 கி சை)

ஜூன் 26 திங்கள்

மாலை

5 00 சிறீ சபாபதிஐயர் வாய்ப்பாட்டு
5 50 கர்நாடக வாத்தியக்கோஷ்டி மலயமாருதம்
6 00 சிறீ பி. செஞ்சுராமையா வீணை
6 45 சிறீ சபாபதி ஐயர் வாய்ப்பாட்டு
7 15 எது? "சமூக முன்னேற்றத்துக்குச் சங்கடம் தேவையா? சீர்திருத்தம் தேவையா? தமிழில் ஒரு தர்க்கம் சிறீமதி வி. டி. லக்ஷ்மியும் சிறீ வாராவும்
7 30 "திருக்யோகி செலுங்கு நாடகம்
8 15 சிறீஎன்.எஸ்.ராமச்சந்திரன் வீணை
8 55 சர்வதேசங்களுக்குள் 5 புதிய ராஜதந்திரம் ஆங்கிலப்பேச்சு
9 10 உள்ளூர் வர்த்தமானமும் அறிவிப்புகளும்
9 15 வர்த்தமானமும்வானிலைவிபரமும்
9 30 ஐரோப்பிய சங்கீதம்
10 30 முடிவு

### மதராஸ் 2

60. 98 மீட்டர்கள் (வி/4920 கி சை)

மாலை

5 00—6 00 மதராஸ் 1ல் இருக்கிறபடி
6 00 நாராயண தீர்த்தரின் சிறீ கிருஷ்ணலீலா தரங்கிணியிலிருந்து சில மணிகள்
6 15 நடப்புவிலை வாசியும் அறிவிப்புகளும்
6 20 நாட்டுப்புற தற்கால விமர்சனம்
6 30 சங்கீத சம்பிரதாயம்
6 45—9 30 மதராஸ் 1ல் இருக்கிறபடி
9 30 சிறீமதி டி. எஸ். ஞானம்பாள் வாய்ப்பாட்டு
10 30 முடிவு

### திருச்சினுப்பள்ளி

வி யு தி 397 மீட்டர்கள் (வி/758 கி சை)

டிரான்ஸ்மிஷன் 1

பகல்

2 00—3 00 கிராமபோன் சங்கீதம்
2 00 மைசூர் வாத்தியக்கோஷ்டி
2 15 ஹம்சவேணிசகோதரிகள் சிறீமதி கே. பி. சுந்தராம்பாள்
2 45 மைசூர் டி. சௌடையா பிடில் மூர்த்தவும் மணியும் பிடிலும் பியானோவும்
3 00 முடிவு

டிரான்ஸ்மிஷன் 2

மாலை

6 00 கிராமவாசிகளுக்குரிய நிகழ்ச்சிகள் காமதேனு கோழிக் குஞ்சுகளைக் கணக்குப் பார்த்தல் நடப்புவிலை வாசியும் அறிவிப்புகளும்
6 30 சிறீ எம். ஜி. நாகோஜிராவ் வாய்ப்பாட்டு
7 00 "பத்திரிகைத் தொழில்" ஒரு பொதுஜன கைங்கரியம் சிறீ ஆர். நாராயணன் தமிழ்ப் பேச்சு
7 15 சிறீமதி என் கெவி புல்லாங்குழல்
8 00 சிறீ எம் ஜி. நாகோஜிராவ் வாய்ப்பாட்டு
8 30 சிறீ எம். கே. ராதாவும் சிறீ டி. சுந்தராம்பாளும் சிறீமதி எம்.ஆர். சந்தானலக்ஷ்மி
8 45 சிறீமதி என்.கெவி புல்லாங்குழல்
9 15 தமிழ் வர்த்தமானமும் வானிலை அறிக்கையும்
9 30 முடிவு.




# கேரள வெப் சோப்

சருமத்திற்கு உற்சாகம் விளைக்கக் கூடிய உயர்தரமானது

அழகான பெண்களுக்குரிய சோப்

எங்கும் கிடைக்கும்

ஏஜென்ஸ்: தேவார் அன் கம்பனி, மெயின் ஸ்ரீட், கொழும்பு

Mis 159, 17-11-38—

**மா. கு. தெண்டாயுதபாணி**

நகை அடைவு பிடிப்போர், கோட்டடி,

யாழ்ப்பாணம்.

1922-ம் ஆண்டில் ஸ்தாபிதமானது

**நிரந்தரமாகப் பணமிடுதல்**

வருஷம் 1-க்கு 100-க்கு 5% படியும், ஆறுமாதங்களுக்கு 100-க்கு 4% படியும் வட்டிக்கு அங்கிகரிக்கப் படும்.

நாற்றுக்குப் 12வீதப்படி நகை அடைவுக்குப் பணங்கொடுக்கப்படும்

Y. 108. 22-7-38 to 21-7-39

(தூ)


## அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கச் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்ஸ்பெற்று அடைவுபிடிக்கும் வண்ணார்பண்ணை மு. ராம. மு. சே. சேவுகந்செட்டியார்கடையில் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

1938-ம் ஆண்டு பெப்ரவரி

| தம் | உ | ரு | ஊர் பெயர் நகையின்விபரம் |
|---|---|---|---|
| 14039 | 1 | 6 | காரைதீவு போ சின்னக்குட்டி சிறுபெட்டி மோதிரம் 1 |
| 14070 | 2 | 20 | வட்டுக்கோட்டை மு அருணாசலம் ஒரு வைரச்சன்னம்கட்டிய பிறை மோதிரம் 1 |
| 14161 | 11 | 8 | தீராவிடை ரா சோமசுந்தரம் இமிதோடு சோடி 1 |
| 14189 | 13 | 45 | சோனகதெரு மீ முகம்மதுமீராலெவ்வை சங்கிலி 1 |
| 14220 | 16 | 63 | நவாலி சோ வைத்திலிங்கம் துண்டுச்சங்கிலி 1 |
| 14221 | 16 | 13 | நவாலி சோ வைத்திலிங்கம் ஒமி கவுந்தோர் 1 |
| 14226 | 16 | 50 | பெருமான்கோவிலடி சி அரியரெத்தினம் நெளிக்காப்பு சோ 1 |
| 14238 | 17 | 14 | மாவிட்டபுரம் து சுப்பிரமணியம் பின்முகப்பு 1 தடை 2 |
| 14243 | 17 | 280 | தெல்லிப்பழை சிருசை துரை சேடி உருப்படி ஆறுடன் தாலி முருக்கத்தி கோடி 1 |
| 14252 | 18 | 160 | வண்ணார்பண்ணை மு சு முருகேசு அரைப்பவுன் 2 தடை 2 கோர்த்த சாட்டுக் சோடி 1 |
| 14274 | 20 | 47 | வண்ணார்பண்ணை மு சு முருகேசு அரிக்கக்காப்பு சோடி 1 |
| 14279 | 20 | 250 | வேலணை க முத்துத்தம்பி பிளிக்காப்பு சோடி 1 அருமாக்கூடு 2 அட்டியல் 1 |
| 14280 | 21 | 125 | ஆரியகுளம் அ ஆறுமுகம் ஒரு வயிரச்சன்வர்கட்டிய மோதிரம் 1 கல் மோதிரம் 1 |
| 14281 | 21 | 45 | ஆரியகுளம் அ ஆறுமுகம் இமி பெண்டன் 1 |
| 14284 | 21 | 18 | வண்ணார்பண்ணை கா குழந்தைவேலு கிளாவர் மோதிரம் 1 வெள்ளைக்கல் தோடு சோடி 1 |
| 14308 | 23 | 55 | வல்வெட்டித்துறை சு சின்னத்துரை மினதுகாப்பு சோடி 1 |
| 14333 | 26 | 10 | அத்தியடி வே கந்தையா துண்டுவைத்த சுதேசிக்குச்சு 2 |
| 14346 | 27 | 100 | சோனகதெரு மீ முகம்மதுமீராலெவ்வை அரிக்கக்காப்பு சோடி 1 S மோதிரம் 1 கைச்சங்கிலி 2 |
| 14355 | 28 | 14 | வேலணை க முத்துத்தம்பி இமி வெள்ளைக்கல் தோடுசோடி 1 |
| | | | மார்ச் |
| 14366 | 2 | 17 | சந்திரபடம் கா நடராசா துண்டுவைத்த அரைப்பவுன் 2 |
| 14393 | 5 | 55 | சாவளை நா நடராசபிள்ளை துண்டுச் சங்கிலி 1 |
| 14453 | 11 | 18 | திருநெல்வேலி க பொன்னம்பலம் இமி அச்சரக்கூடு 1 |
| 14455 | 12 | 17 | கொப்பாய் தெற்கு து நடராசா இமி தோடு சோடி 1 |
| 14464 | 13 | 85 | மாங்குளம் வே முத்து முறிச்சுக்குத்தி அட்டியல் 1 சப்பிக்காடுக்கன் சோடி 2 |
| 14483 | 15 | 55 | வேலணை க முத்துத்தம்பி பஞ்சாயுதம் கோர்த்த துண்டுச்சங்கி 1 |
| 14490 | 15 | 60 | தீராவிடை மு சபாபதிப்பிள்ளை பழுது கொழுக்கியில்லாத சங்கிலி 1 |
| 14495 | 16 | 12 | கன்னாகம் ராம நாகமணி இமி சிகப்பு பச்சைக்கல்தோடு 3 |
| 14501 | 16 | 8 | நல்லூர் வே கனகரத்தினம் முள நாட்டுக்கடுக்கன் சோடி 1 |
| 14522 | 18 | 205 | வல்வெட்டித்துறை ச சின்னையா துண்டுசடை நாலுடன் முறிச்சுக்குத்திக் கோடி 1 |
| 14548 | 20 | 27 | வெள்ளாந்தெரு க செல்லையா பட்டணம் காப்பு சோடி 1 |
| 14551 | 20 | 185 | நல்லூர் தி ரெத்தினம் இரண்டு துண்டுடன் முருக்கக்குத்திக் கோடி 1 |
| 14559 | 21 | 55 | நல்லூர் தி ரெத்தினம் சாட்டுக் கோடி 1 |
| 14560 | 21 | 51 | கட்டுவன் ம கந்தையா அச்சரக்கூடுடன் துண்டுச் சங்கிலி 1 |
| 14578 | 22 | 10 | காரைநகர் க அ பொன்னம்பலம் இமி தோடு சோடி 1 |
| 14615 | 26 | 46 | சிறுப்பிட்டி மு அப்புக்குட்டி முருக்கக்குத்தி அட்டியல் 1 |
| 14664 | 31 | 130 | தெல்லிப்பழை சி துரை சிறிக பொசுக சங்கிலி 2 |
| 14667 | 31 | 7 | வண்ணார்பண்ணை மு பட்டுநாகபத்தர் இமி நீலக்கல் மோதிரம் 1 |
| | | | ஏப்பிரல் |
| 14686 | 3 | 9 | கன்னாகம் க வேலுப்பிள்ளை இமி தோடு சோடி 1 |
| 14715 | 5 | 90 | வண்ணார்பண்ணை சே மாணிக்கம் துண்டுதடை நாலுடன் சாட்டுக் கோடி 1 |
| 14729 | 6 | 300 | மல்லாகம் நா இளையப்பா இரண்டுதுண்டுடன் தாலிச்சங்கிலிக் கோடி 1 |
| 14734 | 6 | 18 | வண்ணார்பண்ணை மு சு முருகேசு கிளாவர் மோதிரம் 1 |
| 14753 | 8 | 26 | கொப்பாய் தெற்கு மு கனகரெத்தினம் இமி தோடு சோடி 1 ஷெ. பதக்கம் 1 |
| 14759 | 9 | 13 | தட்டாதெரு ச தரையப்பாப்பத்தர் கிளாவர் மோதிரம் 1 |
| 14772 | 10 | 12 | வண்மேற்கு க சிவராஜா S S விலாசப்போட்ட மோதிரம் 1 |
| 14775 | 10 | 165 | நல்லூர் தி செத்தினம் துண்டுதடை ஆறுடன் சாட்டுக் கோடி 1 |
| 14778 | 11 | 20 | திருநெல்வேலி ஆ பொன்னம்பலம் ஆறுதன் மோதிரம் 1 |

விற்பனவு நிகழும் பிரமாதி வருஷம் ஆனி மாதம் 20-ந் தேதி (4-7-39) செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் எடுபட்ட நகை பிறந்தகலாக மேற்படி யார் கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ச. ஐயம்பிள்ளை உடையார்
கேத்திர்மேல்தர்

Mis 66 19 & 22-6-39


# மலேறியாவுக்கு



நியாயத்துக்கு ஒத்துக்கொள்ளக்கூடிய மாற்று மருந்து

## பைரெக்ஸ்

நீடித்தகாலமாகப் புகழ்பெற்று விளங்கும் நற்பியிருக்கத் தகுந்த

காலவரையறைவு

குறைவான கலவை.

பெங்கால் கெமிக்கல்
கல்கத்தா, பம்பாய்.

எஜென்ஸ்:
தேவார் அன் கோ,
மெயின் ஸ்டரீட், கொழும்பு.

(Mis 159. 10-9-37—



**திருநெல்வேலி ஒற்றுமை நிதி** (வரையறுத்தது)

அதிகாரம் பெற்ற மூலதனம் ருபா **500,000.**

ஒன்று 25 சதமாக 80 மாதங்கள் செலுத்தி ருபா 25ம் ஆதாயமும் பெறலாம்

வங்கித்தொழிலும் வியாபாரமும் இலாபகரமாய் நடக்கின்றன.

தேசியகருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெறமுடியும்.

இலகுவான முறையில் இறுக்கக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம்.

உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும் நிரந்தரமாயும், சப்பாத்தியத்திலும், கடைக்கணக்கிலும் பணம் ஏற்றுக்கொள்வோம்.

பங்குகளுக்கு முந்துங்கள்!

வ. சோமசுந்தரம்,
காரியாதிகாரி.

(வி)

(Y. 182. 1-11-38 to 31-10-39)


№ 391

### வேதாந்தக் கொடி பிடித்த வீரர் இராமதீர்த்தர்

2-ம்பக்கத் தொடர்ச்சி

யோ உடல்கள் இருக்கின்றன. சந்திரனின் வெள்ளித் தாரகையும், சூரியனின் தங்கத் தாரையும்பெற்று நான் மகிழ்ச்சியுடன் வாழ்வேன். கானி அம் மலையிலும் கலந்து சுதந்திரமாய் நான் திரிவேன். கடல் அலைகளில் மகிழ்வுடன் நான் நடப்புரிவேன். நான் உச்சியிலிருந்து வந்தேன். கதவைத் தட்டினேன். தூங்குகிறவர்களை எழுப்பினேன். ஒருவருக்கு ஆறுதல் கூறினேன். இன்னொருவர் கண்ணீரைத் துடைத்தேன். சிலருக்கு உடையளித்தேன். சிலர் முகத்திரை களைந்தேன். இப்பொழுது நான் போகிறேன். என்னிடம் ஒன்றுமில்லை. என்னை எவரும் காணமுடியாது."

இதை எழுதியபின் சுவாமி ராமதீர்த்தர் கங்கையில் நீராடச் சென்று மறைந்தார். இது 1906-ம் வருஷம் அக்டோபர் மாதம் ஆகும். இவ்விதம் ஒரு ஜோதி மறைந்தது.

—வேதாந்தி.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. Adchalingam, residing at Vannarponnai East, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai Jaffna on Thursday 22th June 1939.